
# சித்த மருத்துவத்தில் நீரிழிவு

## நூல் ஆய்வு




**Dr. தி. தயாளினி**
**B.S.M.S (Jaffna), M.Phil. (Jaffna), Ph.D. (Pera)**
**Dr. ப.சிவப்பிரியா B.S.M.S (Jaffna)**
**Dr. லோ.கபாலினி B.S.M.S (Jaffna)**
**Dr. வி.தினேஷ்குமார B.S.M.S (Jaffna)**


**கார்த்திகை 2018**

# சித்த மருத்துவதில் நீரிழிவு

# நூல் ஆய்வு

**வைத்திய கலாநிதி தி. தயாளினி.**

B.S.M.S (Jaffna), M.phil (Jaffna), Ph.D (Pera)

**சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 1,**

**சித்தமருத்துவத் துறை,**

**யாழ் பல்கலைக்கழகம்.**

**வைத்திய கலாநிதி ப. சிவப்பிரியா**
B.S.M.S (Jaffna)

**வைத்திய கலாநிதி லோ. கபாலினி.**
B.S.M.S (Jaffna)
(செய்முறை விரிவுரையாளர், சித்தமருத்துவத் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.)

**வைத்திய கலாநிதி வி. தினேஷ்குமார.**
B.S.M.S (Jaffna)
(விரிவுரையாளர், பல்கலைக்கழக கல்லூரி)

| | | |
|---|---|---|
| நூல் | :- | சித்த மருத்துவதில் நீரிழிவு நூல் ஆய்வு |
| ஆசிரியர்கள் | :- | வைத்திய கலாநிதி தி. தயாளினி.<br>வைத்திய கலாநிதி லோ. கபாலினி.<br>வைத்திய கலாநிதி ப. சிவப்பிரியா.<br>வைத்திய கலாநிதி வி. தினேஷ்குமார. |
| முகவரி | :- | 27/28, புங்கங்குளம் வீதி,<br>சுண்டிக்குளி. |
| பதிப்பு | :- | முதலாம் |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| அச்சுப் பதிப்பு | :- | மெகா பிறிண்டஸ்,<br>றக்காவீதி,<br>யாழ்ப்பாணம். |
| ஆண்டு | :- | ஆவணி 2018 |
| விலை | :- | 200/= |

# வாழ்த்துரை

"சித்த மருத்துவத்தில் நீரிழிவு நூல் ஆய்வு" எனும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதனை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சித்த மருத்துவம் சம்பந்தமான பல நூல்கள் இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் தோன்றியுள்ளன. இவைகளில் குறித்த ஒரு நோய்க்கு இயல், மறுபெயர்கள், வகைகள், மருத்துவம், குறிகுணங்கள் என சில நூல்களில் ஒரே கருத்துகளும் சில நூல்களில் வேறுபட்ட கருத்துகளும் கூறுப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஒரு நோயைப்பற்றி முழுமையாக அறியவேண்டுமெனில் பல நூல்களையும் ஆராயவேண்டி உள்ளது. அதனை இலகுபடுத்தம் முயற்சிக்காக நீரிழிவு நோய் பற்றி பல நூல்களையும் ஆராய்ந்து தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது வரவேற்கதக்கது. இந்நூல், ஆய்வுகனை மேற்கொள்ளும் மாணவர்கள், வைத்தியர்கள் என பலருக்கும் மிக்க உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இது போன்று எதிர்காலத்தில் பற்பல நோய்களுக்கும் நூல் ஆய்வு செய்து வெளிவரவேண்டும் என்று வாழ்த்தி பழம்பெரும் பெருமை வாய்ந்த எம் சித்த மருத்துவத்தின் மீள் எழுச்சிக்கு எல்லாம் வல்ல இறைவன் ஆசி புரிவாராக.

டாக்டர். திருமதி. சி. பஞ்சராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவதுறை
யாழ் பல்கழைக்கழகம்

# வடமாகாண சுதேச மருத்துவ ஆணையாளரின் செய்தி

மருத்துவ துறையானது மனிதனது சுகவாழ்வின் அத்திவாரம் எனலாம். அவ்வாறான துறையினது இருப்பும், பயனும், வளர்ச்சியும், தொடர் மருத்துவ கல்வி, தொடர் ஆராய்ச்சிகள் போன்றவற்றால் உறுதிசெய்யப்படுகின்றது. எனவே ஒரு மருத்துவமானது நிலைபெற அது தொடர்பான ஆய்வுகள், ஆதாரங்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. விசேடமாக வரலாற்றுக்கு முற்பட்ட மருத்துவமான சித்த மருத்துவ நூல் ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பாரம்பரிய ரீதியில் வளர்ச்சி பெற்ற இத்துறையானது தற்போதைய சுகாதார சவால்களை வென்றெடுக்கும் வகையில் வளர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் விடயமாகும்.

இந்த அடிப்படையில் சித்த மருத்துவ துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் Dr. (திருமதி). தி. தயாளினி அவர்களது வழிகாட்டலில் மூன்று சித்த மருத்துவ பட்டதாரிகள் இணைந்து மேற்கொண்டுள்ள "சித்த மருத்துவத்தில் நீரிழிவு" எனும் நூல் ஆய்வு முக்கியமானது மிகவும் பாரட்டுதற்குகுரியதாகும். இந்த நூல் ஆய்வானது ஒன்பது சித்த மருத்துவ நூல்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருப்பது அவதானிக்ககூடியதாக இருக்கின்றது. விஷேடமாக நீரிழிவு நோயுடன் ஒத்து நோக்கக்கூடிய நோய் நிலைமைகள் தொடர்பிலும் அவற்றின் முக்குறிகள் தொடர்பிலும் அவற்றின் குறிகுணங்கள் தொடர்பிலும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளமை காணப்படக்கூடியதாக இருக்கின்றது. எனினும் இந்நோய் நிலைமைகளுக்கான சிகிச்சை முறையோ அதனோடு இணைந்த விடயங்களோ

இந்த ஆய்வில் உட்படுத்தப்படாமை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. எனவே ஆய்வாளர்கள் தங்களது முயற்சியில் அடுத்தபடியாக இவ் ஆய்வனை மேற்கொள்வார்கள் என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். எனினும் இந்த சித்த மருத்துவத்தில் நீரிழிவு தொடர்பான ஆய்வு நூலானது வளர்ந்து வரும் சித்த மருத்துவ கல்வி முறைமையில் காத்திரமான பங்களிப்பை நல்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலாசிரியர்களின் முயற்சிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு இது போன்ற பல்வேறு நூல் ஆய்வுகள் வெளிவர வேண்டுமெனவும் இறைவனை பிராத்திக்கின்றேன்.

Dr. (திருமதி). சி.துரைரட்ணம்
மாகாண ஆணையாளர்
சுதேச மருததுவ திணைக்களம்
வடமாகாணம்

# ஆசியுரை

‘‘சித்த மருத்துவத்தில் நீரிழிவு – நூல் ஆய்வு’’ எனும் இவ்வரிய படைப்பிற்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை கொள்கிறேன். மனித மேம்பாட்டுக்கு சவாலாயமையும் நீரிழிவு போன்ற நோய்களைக் கையான சுதேச மருத்துவத்தின் பங்களிப்பு முன்னெப்போதும் இல்லாதிவாறு பெரிதும் எதிர்பாக்கப்படும். இத்தருணத்தில் பழம் பெரும் சித்த மருத்துவ நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்து தகவல்களை வெளிக்கொணரல் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஏற்கனவே இந்நூலாசிரியர்களால் இத்தகைய முயற்சிகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டள்ளமையும் நினைவு கூறப்படத்தக்கது. இவர்களின் இவ்வகை பங்களிப்புகள் மென்மேலும் வளர்ச்சியடைந்து தேசத்தின் சுகாதார பராமரிப்பி காத்திரமான தாக்கத்தினை செலுத்த வேண்டி இறைவனை பிராத்திக்கின்றேன்.

வைத்தயர் ஸ்ரீ. ஜெ. கிஷோலோஜன்
மருத்துவ அலுவலர்,
இலங்கை ஆயர்வேத மருத்துவ சேவை,
பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயர்வேத ஆராய்ச்சி நிறுவகம்,
நாவின்ன மகரகம.

# எம்முரை

தமிழ் மருத்துவமான சித்த மருத்தவமானது பரமசினிடமிருந்து குருசீட பரம்பரை வழியாக சித்தர்களுக்கு கிடைக்கப்பெற்று அவர்களிமிருந்து சாதாரண மனிதனுக்கு கிடைக்கப்பெற்ற ஒரு வரப்பிரசாதமாகும்.

இவ்வாறு பெற்ற மருத்துவத்தை காலப்போக்கில் அழியவிடாது பாதுகாப்பதற்காக முன்னைய காலத்தில் வாழ்ந்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற சித்தர்கள், பல தேசங்களை ஆண்ட அரசர்கள் தங்களின் அனுபவங்களின் மூலம் பெற்றுக்கொண்ட மருத்துவ குறிப்புகளை பாடல்கள் மூலம் ஏடுகள், கல்வெட்டுக்கள் போன்றவற்றில் கூறிவுள்ளனர்.

தற்காலத்தில் தொற்றாநோய்களில் ஒன்றான ''நீரிழிவு நோய்'' அதிகரித்து கணப்படுகின்றது. எமக்கு கிடைக்கப்பெற்ற சித்த மருத்துவ நூல்களில் நீரிழிவு பற்றி குறிப்பிடப்பட்ட நூல்களை எடுத்து ஆராய்ந்த போது நீரிழிவின் வேறுபெயர்கள், வரைவிலக்கணம், குறிகுணங்கள், வகைகள், வகைகளின் குறிகுணங்கள் என்பன எல்லா நூல்களிலும் கூறப்படவில்லை. சில விடயம் சில நூல்களிலும், வேறு சில விடயங்கள் வேறு சில நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நீரிழிவு நோயின் சகல விடயங்களையும் உள்ளடக்கயதாக இன்நூல் எழுதப்பட்டு வெளிவருகின்றது.

இந்த நூலானது சித்த மருத்துவ மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், வைத்தியர்களுக்கும் ''நீரிழிவு நோய்'' சம்மந்தமான ஒரு அறிவினை பெற்றுக்கொள்ள வழிகாட்டியாக இருக்கும் என கருதுகின்றோம். மேலும்

இந்த நூலை எமக்கு எழுதி வெளியிட அருள் புரிந்த இறைவனுக்கு நன்றியை கூறிக்கொள்கின்றோம்.

**வைத்திய கலாநிதி தி. தயாளினி.**
BSMS (Jaffna), Mphil (Jaffna), Ph.D (Pera)
(சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 1, சித்தமருத்துவத் துறை, யாழ் பல்கலைக்கழகம்)

**வைத்திய கலாநிதி ப. சிவப்பிரியா.** BSMS (Jaffna)

**வைத்திய கலாநிதி லோ. கபாலினி.** BSMS (Jaffna)
(செய்முறை விரிவுரையாளர், சித்தமருத்துவத் துறை, யாழ் பல்கலைக்கழகம்.)

**வைத்திய கலாநிதி. வி தினேஷ்குமார**. BSMS (Jaffna)
(விரிவுரையாளர், பல்கலைக்கழக கல்லூரி)

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | நீரிழிவு நோய்க்கான வேறுபெயர்களும் வரைவிலக்கணமும் | 03 |
| 3. | நீரிழிவு நோய் உண்டாவதற்கான காரணங்கள் | 06 |
| 4. | நீரிழிவு நோயின் முக்குறிகுணங்கள் | 19 |
| 5. | நீரிழிவு நோயின் பொது குறிகுணங்கள் | 20 |
| 6. | நீரிழிவு நோயின் வகைப்பாடு | 24 |
| 7. | நீரிழிவு நோயின் வகைகளின் குறிகுணங்கள் | |
| | 7.1 வாத நீரிழிவு | 36 |
| | 7.2 பித்த நீரிழிவு | 40 |
| | 7.3 கப நீரிழிவு | 45 |
| | சலத்தை பரீட்சிக்கும் முறை | 56 |
| | தொகுப்பு | 58 |
| | உசாதுணை நூல்கள் | 66 |

அட்டவணைகள்

01- நீரிழிவு நோயின் வேறுபெயர்களும்

நூல்களின் விபரமும் 05

02- நீரிழிவு நோய் வருவதற்கான

காரணங்களும் நூல்களின் விபரமும் 16

03- நீரிழிவு நோயின் குறிகுணங்கள் 21

04- நீரிழிவு நோயின் வகைப்பாடும்

நூல்களின் விபரமும் 29

05- ஒன்பது நூல்களிலும் இருபது

வகை மேகத்தின் பெயர்கள் 30

06- நீரிழிவு நோயின் வகைப்பாடும்

(தோஷ அடிப்படையில்)

அவற்றின் குறிகுணங்களும் 49

07- நீரிழிவு நோயின் வகைகளின்

குறிகுணங்களுக்கான நூல்களின் விபரம் 52

# 1. அறிமுகம்

நீரிழிவு நோயானது இன்று மக்கள் மத்தியில் மிக விரைவாக உருவாகிக்கொண்டிருக்கும் தொற்றா நோய்களில் ஒன்றாகும். இது அமைதியாக உயிர் கொல்லும் (Silent killer) நோயாக கருதப்படுகின்றது. இது ஒரு அனுசேபத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் ரோகமாக (Metabolic disorder) ஆகக் கருதப்படுகின்றது. இது இன்சுலின் ஓமோனில் ஏற்படும் பாதிப்பால் அதாவது உற்பத்தி குறைவதல் அல்லது முற்றிலும் இல்லாது போதல், கலங்களிற்குள் குளுக்கோசினை உட்செலுத்தல் குறைவதாலும் ஏற்படுவதாக மேலைத்தேய மருத்துவ நூல்கள் கூறுகின்றது. இதேவேளை இன்நோய்க்கான காரணங்களாக சோம்பேறித்தனமான வாழ்க்கை முறையும், மாறுபட்ட உணவு பழக்கவழக்கங்களும், பரம்பரை வழியாகவும் ஏற்படுகின்றது என கூறப்படுகின்றது.

சித்த மருத்துவத்தில் நீரிழிவை ‘‘சலக்கழிச்சல்’’ என்ற பெயரின் கீழ் பரராஜசேகரத்திலும், ஆயர்வேதத்தில் வாதஜபிரமேகம் என்பதன் கீழ் மதுமேகம் என்ற தலைப்பிலும் நீரிழிவு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்த, ஆயர்வேதம் ஆகிய இருமருத்துவத்திலும் நீரிழிவு உண்டாவதற்கான காரணங்களை பார்க்கும் போது அவை கபத்தைக்கூட்டக் கூடிய காரணங்களாக அமைகின்றன. இதனைத் தொடர்ந்து உடற்தாதுக்களான சாரம், செந்நீர், தசை, கொழுப்பு என்பன பாதிப்படைந்து ஏனைய தோஷங்களும் (வாதம், பித்தம்) பாதிக்கப்பட்டு துணைநோயாகளையும் (உயர்குருதி அழுக்கத்தையும்) உண்டாக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

நீரிழிவு என்னும் பதம், சித்த மருத்துவத்தின் ஆரம்ப காலத்திலேயே பல நூல்களில் இன் நோயின் தன்மை,குறிகுணம், வகைகள், அவற்றுக்கான சிகிச்சை என்பன பாடல் வடிவில் கூறப்பட்டுள்ளன. அதன் வகைகள் தோஷத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையின் குறிகுணத்தை பார்க்கும் போது மேலைத்தேய மருத்துவத்தின் நீரிழிவினால் ஏற்படும் உபத்திரவங்களின் குறிகுணங்களை ஒத்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

தற்கால உலகில் நீரிழிவு நோயிற்கு பக்கவிளைவற்ற இறைவனால் அருளப்பட்ட மூலிகைகள் பல சேர்ந்த மருந்துகள் சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளன. இந்த மருந்துகளை அறிவதற்கு முன் சித்த மருத்துவ ஆதி நூல்களில் நீரிழிவு பற்றிகூறப்பட்ட விபரங்களை தொகுத்து ஒரு தெளிவான ஆய்வு நூலாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்கமைய நீரிழிவு பற்றிக் குறிப்பிட்ட 9 நூல்கள் எடுக்கப்பட்டு அவற்றிலிருந்து நீரிழிவு பற்றிய விடயங்களை எந்தமாற்றமும் செய்யாது தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

## 2. நீரிழிவு நோய்க்கான வேறுபெயர்களும் வரைவிலக்கணமும்

நீரிழிவு என்னும் நோய்க்கு **“பரராஜசேகரம் ஐந்தாம் பாகத்தில்”வாத சலக்கழிச்சல், நீரிழிவு, மதுமேகம்** என்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் மதுமேகம் என்னும் பதத்திற்கு கீழ் கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

‘‘எந்த நீர்க்கரைசலானாலும் முற்றினாம் மதுமேகமாம்’’

**“நோய்நாடல் நோய் முதல்நாடல்திரட்டு இரண்டாம்பாகத்தில்’’ மேகநீர்** என்ற தலைப்பின் கீழ் நீரிழிவானது பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

‘‘இயற்கைக்கு அதிக அளவில் அடிக்கடி சிறு நீரிழிதல், ஏழு உடற்தாதுகளின் வன்மை இழத்தல்’’ முதலிய இயல்புடைய நோய்

இதே நூலில் **இனிப்பு நீர்**என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

‘‘அடிக்கடி சிறுநீர் அளவுக்கு மிஞ்சி இழிதல், நீர் இழிந்த இடத்தில் ஈ, எறும்புகள் மொய்த்தல், அதனை காய்ச்சின் சக்கரை மணம் வீசல், உடல் நாளுக்கு நாள் இளைத்தல்’’ என்னும் இயல்புடைய நோயாகும்

**“சித்த மருத்துவம் பொது”** என்ற நூலில் **நீரழிவு** என்ற தலைப்பின் கீழ் மேற்கூறப்பட்ட வரைவிலக்கணமே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் **நீரினைப்பெருக்கல் நோய்கள்** என்னும் தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''மிகுந்த அளவில் அடிக்கடி சிறுநீர் இழிதல், உடல் இளைத்தல்''என்ற இயல்பை கொண்டது.

**பரராசசேகரம்,செகராஜசேகர வைத்தியம், அமிர்தசாகரம் என்னும் பதார்த்தசூடாமணியும் வைத்திய தெளிவும் அனுபந்தத்துடன் ஆகிய நூல்களில் நீரிழிவு என்ற பெயர் பாவிக்கப்பட்டுள்ளது.**

**சலரோகம் என்னும் பெயர் அமிர்தசாகரம் என்னும் பதார்த்தசூடாமணியும் வைத்திய தெளிவும் அனுபந்தத்துடன் என்ற நூலில் மட்டும் கூறப்பட்டுள்ளது.**

**பரராசசேகரம்,செகராஜசேகர வைத்தியம் இரண்டு நூல்களிலும் சலம் அதிகமாகக் கழிவதை சலக்கழிச்சல் என்னும் தலைப்பின் கீழ் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.**

**யூகி வைத்திய சிந்தாமணி, சரபேந்திர வைத்திய முறைகள் (நீரிழிவு சிகிச்சை), சிகிச்சாரத்னதீபம் இரண்டாம் பாதமாகிய வைத்திய சிந்தாமணி, பதினென்சித்தர் அருளிச் செய்த ஆத்மரட்சாமிருதம் என்னும் வைத்திய சாரசங்கிரகம்** என்னும் நூல்களில் நீரிழிவுக்கான வரைவிலக்கணங்கள் குறிப்பிடப்படவில்லை.

**அட்டவணை 1 இல் நீரிழிவு நோயின் வேறுபெயர்களும் நூல்களின்விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

6 நூல்களில் **நீரிழிவு** என்னும் பதம் பாவிக்கப்பட்டுள்ளது.

5 நூல்களில் **மேகநீர்** என்னும் பதம் பாவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 - நீரிழிவு நோயின் வேறுபெயர்களும் நூல்களின் விபரமும்**

| | வேறுபெயர்கள் | பரராஜசேகரம் 5ம் பாகம் | செகராஜசேகர வைத்தியம் | அமிர்தசாகரம் | யூகிவைத்திய சிந்தாமணி | சரபேந்திர வைத்திய முறை | நோய்நாடல் நோய்முதல் | சித்த மருத்துவம் | வைத்திய சிந்தாமணி | ஆத்மரட்சாமிர்தம் | எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நீரிழிவு | √ | √ | √ | | | √ | √ | | √ | 6 |
| 2 | மேகநீர் | | | | √ | √ | √ | √ | √ | | 5 |
| 3 | சலக்கழிச்சல் | √ | √ | | | | | | | | 2 |
| 4 | மதுமேகம் | √ | | | | | √ | | | | 2 |
| 5 | இனிப்புநீர் | | | | | | √ | √ | | | 2 |
| 6 | மிகுநீர் | | | | | | √ | √ | | | 2 |
| 7 | வெகுமூத்திரம் | | | | | | √ | √ | | | 2 |
| 8 | பிரமேகம் | | | | | | | √ | | √ | 2 |
| 9 | சலரேகம் | | | √ | | | | | | | 1 |
| 10 | தித்திப்புநீர் | | | | | | | √ | | | 1 |
| 11 | நீர்ப்பாடு | | | | | | | √ | | | 1 |

## 3. நீரிழிவு நோய் உண்டாவதற்க்கான காரணங்கள்

ஆய்வுக்கு எடுக்கப்பட்ட 09 நூல்களில், 07 நூல்களில் நோய் உண்டாவதற்கு காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"பரராஜசேகரம் ஐந்தாம் பாகம்"** எனும் நூலில் **மேகரோக நிதானத்தில், மேக நோய் உண்டாவதற்கு ஏது** என்ற தலைப்பில் கீழ் இந்நோய் உண்டாவதற்க்கான காரணங்கள் ஆக கீழ் வரும் இரு பாடல்களும் கூறப்பட்டுள்ளது.

"மாதர் மயக்க மிகுதியினான் மதியி லச்ச மிகுதலினால்
போதை தருங்கள் ளருந்துதலாற்புலான்மீனிறைச்சி நெய்ப்பாலால்
சீத வுணவாற் பதனழிந்த தீனை விரும்பித்தின்பதனால்
ஓது முணவின் மேலுணவா லுடம்பு மிகவும் பருத்தலினால்"

"அருந்து முணவிலினிப்பதிக மாக வுறலா லிராக்காலம்
பொருந்து முறக்கந் தவிர்தலினாற் புசிப்புக்குறைவான் மிகுதியினால்
திருந்து மடவார் போகமற விடலான் மிகலாற் றேகமிக
வருந்த வெயிலின் மிகுநடையால் வந்து தோன்றும் பலமேகம்"

பொருள்:-

கலவி, பயம், கள் அருந்துதல், புலால், மீன், நெய், இறைச்சி, பால், சீத உணவு, பதனழிந்த உணவு, உடல் பருத்தல், இனிப்பு உணவை அதிகமாய் உண்ணல், உறக்கமின்மை, போகம், தேக வருத்தம், வெயிலில் மிகு நடை, இவற்றால் மேகநோய் வருமென கூறப்பட்டுள்ளது.

இதே வேளை **சலக்கழிச்சல்** என்னும் தலைப்பின் கீழ் **சலக்கழிச்சல் உண்டாவதற்கு ஏது** என நோய்வரக் காரணங்கள் கீழ் வரும் பாடல் மூலம் கூறப்பட்டுள்ளது

“விந்துவை மூத்திர ரத்தை மிகுதியும் பெருகு மூணால்
மந்தமை மிகலாற் றேகம் வளமுறப் பெருத்த லான்மீன்
வந்திடு மிறைச்சி நெய்பால் மதுக்குடி மிகலான் மற்றும்
சந்ததமாதர் போகந் தன்னிலாழ்ந் திருக்கை யாலும்”

“வெய்யிலி னடக்கை யாலும் மிகுகொழுப் பாக்கு மூணை
மெய்யுற நாளு முண்டு வேலையற் றிருத்த லாலும்
செய்யுறு மெண்ணெய் தன்னைத் தேய்த்தலை விடுக்கையாலும்
பெய்யுநீ ரழிவுண்டாகு மெனமறை பேசு மன்றே”

பொருள்:-

விந்து சலமிகுதி, மந்தம் மிகுந்து தேகம் பெருத்தல், மீன் இறைச்சி பால் நெய் கள் போன்றவை அருந்தல், போகம் அதிகரித்தல், வெயிலில் நடத்தல், மிக கொழுப்பு உண்ணல், வேலையற்றிருத்தல், எண்ணெய் தேய்த்து முழுகுவத் தடுத்தல், போன்றவற்றால் நீரிழிவு நோய் உண்டாகும்.

**"செகராஜசேகர வைத்தியம்"** என்னும் நூலில் **நீரிழிவின் குணமும் மருந்தும்** என்னும் தலைப்பில் இந்நோய் உண்டாவதற்க்கான காரணங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது

"நெய்யினைமிகுதிகொள்வார் நிணப்புலாலிறைச்சிதின்பார்

ஐயினையெழுப்புமோர்பா லதிகமாயருந்திவாழ்வார்

மெய்யினிலெண்ணெய்வாரார் வெயிலிடைநடப்போர் நாளும்

தையலார்போகத்தாழ்வார் தமக்குநீரிழிவுண்டாகும்"

பொருள்:-

நெய், புலால், இறைச்சி மிகுதியுண்பவர், சீதத்தை கூட்டக்கூடிய பால் மோர் உண்பவர். உடலில் எண்ணெய் தடவாதோர் வெயிலில் நடப்பவர். பெண்போகம் அதிகமாக விரும்புவவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படும்.

**இதே நூலில் நீரிழிவுண்டாகும் வகை** என்னும் தலைப்பில் பின்வரும் பாடல் கூறப்பட்டுள்ளது.

''கட்டளைஊணில்மிஞ்சில் குறைந்திடில்காலந்தப்பில்

விட்டிடுநெய்யும்பாலும் இரசமும்புளிப்புமிஞ்சில்

மட்டறுகுழலினார்தன் மயக்கினிலுறுதிசெய்யில்

நெட்டுறுகோடைதட்டில் நீரிழிவாகுமென்னே''

பொருள்:-

உணவு அதிகமாகுதல், நெய், பால், இரசமும் புளிப்பு அதிகமாதல், அதிக கலவி போன்றவற்றால் நீரிழிவு நோய் உண்டாகும்.

**''யூகி வைத்தியசிந்தாமணி''** என்னும் நூலின் **மேகரோகநிதானம்** என்ற தலைப்பிலும்,''**சரபேந்திர வைத்தியமுறைகள் (நீரிழிவு சிகிச்சை)''** என்னும் நூலில் **சலம் இருபதற்கும் பேர் உற்பத்தி** என்ற தலைப்பிலும் நீரிழிவு தோன்றுவதற்கான காரணத்தை கீழ் வரும் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றது.

பாடல் 01

''இயம்பவே ஆறுகுனம் பின்னஞ் செய்தல்

ஏற்றமாய்ப் பிரமணஸ்திரீ சங்கம் பண்ணல்

பயம்பவே பாலர்களுக் கொளித்துத் தின்னல்

பழமைசலம் போறவழி தனைத்த டுத்தல்
அயம்பவே ஆலயத்திற் சலம்விட் டோர்க்கும்
ஆதியாம் வேதத்தை த்தூஷிற் தோர்க்கும்
துயம்பவே சூரியனை வணங்கா தார்க்கும்
சுருக்கா மேகம்வந் துற்ப விக்குந் தானே''

பொருள்:-

அதிக ஸ்திரிபோகம், பாலருக்கு ஒழித்து உண்ணல், சலம் அடக்கல், கோவிலில் சலம் விட்டவர், வேதத்தை பழித்தவர், சூரியனை வணங்காதவர், போன்றவர்களுக்கு விரைவில் மேகம் வரும்.

பாடல் 02

''உற்பவிக்கும் பால் நெய்யா லிறைச்சி கள்ளால்
உரிசையாய் மீன்றன்னால் வருவி ருத்த
மற்பவிக்கும் பதாரத்தத் தால் மதுர வஸ்தால்
மந்தங்கள் தனிற்பொசித்தல் வேகாப் பண்டம்
குற்பவிக்குங் குளித்தவன்ன மங்கை கோஷ்டி
குறித்தநித் திரைதவிர்த லக்கினி மந்தம்
தற்பவிக்குஞ் சரீரந்தான் மிகப்ப ருத்தல்
சலஞ்ந்தான் பயன்படுதல் தரிக்கும் நோயே''

பொருள்:-

பால், நெய், இறைச்சி, மீன், கள், இனிப்பு உணவு, மந்தப்பொருட்கள், வேகாத உணவு கலவி,நித்திரையின்மை, அக்கினி மந்தம், உடல் பருத்தல், போன்றவற்றால் நீரிழிவு நோய் ஏற்படும்.

மேலே குறிப்பிட்ட பாடல் 01 ன் இறுதி பாடல் வரியும், பாடல் 02ம் **“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டுபாகம் இரண்டில்” மேகநீர்** என்ற தலைப்பின் கீழ் நீரிழிவு தோன்றக்காரணமாக கூறப்பட்ட அதே வேளை மேலும் வேறு பாடல்களும் கூறப்பட்டுள்ளன. அவையாவன

பாடல் 03

**அகத்தியர் 1200 ஐ ஆதாரம் காட்டி** இப்பாடல் குறிப்பிடப்பட்டுள்ளது

“கோதையார் கலவி போதை

கொழுத்த மீ னிறைச்சிபோதை

பாதுவாய் நெய்யும் பாலும்

பரிவுட னுண்பீ ராகில்

சோதபாண் டுருவ மிக்க

சுக்கில பிரமே கந்தான்

ஓதுநீ ரிழிவு சேர

உண்டென வறிந்து கொள்ளே”

பொருள்:-

பெண்போகம், பெரிய மீன், இறைச்சி, போதை(கள்), நெய் பால் அதிகம் உண்ணுதல், சேத பாண்டு உருவம் மிக்க சுக்கிலபிரமேகம் உடன் நீரிழிவு உண்டாகும்.

பாடல் 04

“சரியாக மேகத்தா லபான வாயு

தான் புகைக்கு மேலேறிக் கபாலச் சூடாடி

பெரிதான மேகத்தா லத்தி வெந்து

போமப்பா தசைவெந்து ரத்தம் வற்றிப்

பரிவாகித் தசவாயுவால் மந்தங் கொண்டு

பெருந்தீனி மலபந்தம் உதான வாயு

வரிவாகித் தேகமெலாம் விடநீ ராலே

மெய்யழிந்த மேகமென்ற தருப தாச்சே”

பொருள்:

மேகத்தால் அபானவாயு மேலேறி கபாலச்சூட்டுடன் பெரிதாகி மேகத்தால் என்பு, தசை வெந்து ரத்தம் வற்றி இவற்றால் தசவாயு மந்தமாகி பசி அதிகரித்து, மலக்கட்டு, உதானவாயு கூடி உடல் எல்லாம் நஞ்சு நீரினால் மெய்கெட்டு மேகம் இருபதும் ஏற்படும்.

பாடல் 05

**கையெழுத்துப்பிரதியை ஆதாரம் காட்டி** இப்பாடல் கூறப்பட்டுள்ளது.

“நீரிழிவு நோயாகு மேகநீர் வருவழியை
நிகழ்த்தக் கேண்மோ
நேர்நெய்பால் கள்ளிறைச்சி சுவை மீன்
வெறுப்புணவு நிறைந்த இனிமை
சேருணவு வேகாதபொருள் மந்தப் பொருள்
ஈரஞ்சேர்ந்த சோறு
செப்புநோய் வுயர்பெண்கள் கூட்டுறவு
மிகுபோகஞ் செறிந்த தூக்கம்
ஆரிலாமையு மளவதில்லா தூக்கமிகு
நீராக்கு முணவு
ஐயமிகு பொருளுணவு நீர்பொருள்
புத்தரிசி யரிய வெல்லம்
பாரிதனி லுடல்பருத் திடல்பசித் தீயொழிதல்
பற்ற ருன்பயம்
பயமிவைகள் ஆகுமென முன்னவர்கள்
முதல்நூல் பகர்ந்த தன்றே”

பொருள்:-

நெய், பால், கள், இறைச்சி, மீன், வெப்பவுணவு, இனிப்புணவு, வேகாத உணவு, மந்தத்தை ஏற்படுத்தும் உணவு,ஈரம்சேர் உணவு, அதிக உணவு, கபத்தை கூட்டும் உணவு, புத்தரிசி, வெல்லம், உடல் பருத்தல், பசியில்லாதுபோதல், பயம், அதிக துக்கம்,தூக்கமின்மை போன்றவற்றால் நீரிழிவு நோய் வருமென கூறப்பட்டுள்ளது.

பாடல் 03, 04 "**சித்த மருத்துவம் பொது**"என்ற நூலிலும் கூறப்பட்டுள்ளது.

இதே வேளை நீரிழிவு நோயினை "**நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டில்" இனிப்பு நீர்** என்ற தலைப்பின் கீழும்,**"சித்த மருத்துவம் பொது"** என்னும் நூலில் **நீரிழிவு** என்ற தலைப்பின் கீழும் நோய் வரும் வழியை பின்வருமாறு கூறுகின்றார்.

நாடிநூலினை ஆதாரம் காட்டி

"கன்னி மயக்கத்தால் கண்டிடு மேகமே" என்றும்

**மருத்துப்பாரதத்தை ஆதாரம் காட்டி** கீழ் உள்ள பாடல் கூறப்பட்டுள்ளது.

"கிரந்தி புண்ணி ரணமேகக்

கீசக னெனுந்துன் மார்க்கன்

அருந்த தியெனும் பாஞ்சாலி

ளயன்னை யைக்கண்ணுற்றானே"

**“பதினென்சித்தர்கள் அருளிச் செய்த ஆத்மரட்சாமிருதம் என்னும் வைத்திய சாரசங்கிரதத்தில்”மேகரோகப்படலத்தின்** கீழ் **பிரமேகம் நீரிழிவு வருவதற்கான காரணம்** என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“கோதையர் கலவியை மிக விரும்புவதால், மூலத்தற் கனல் மிஞ்சி மேகம் சனித்து சிரம் வரை வெந்துருகி தாதுகெட்டு ஆக்கை நரம்பெல்லாம் பலம் குறைந்து உண்டாகின்றன. அக்காலத்தில் கொழுத்த மீன் இறைச்சி நெய் பால் இவைகளை மிக விரும்பினால் பிணி அதிகரிக்கும்”

**“வைத்திய விளக்கம் என்னும் அமிர்தசாகர பதார்த்த சூடாமணியும் வைத்திய தெளிவும் அனுபந்ததுடன்”,“சிகிச்சாரத்னதீபம் இரண்டாம் பாகமாகிய வைத்தியசிந்தாமணி”** என்னும் இரு நூல்களிலும் நீரிழிவு தோன்றுவதற்கு காரணம் கூறப்படவில்லை.

மேற்கூறியவாறு கறிப்பிடப்பட்ட காரணங்களை நூல்களிக் அடிப்படையில் தொகுத்து அட்டலை 3ல் காட்டப்பட்டடுள்ளது.

**அட்டவணை 02 : நீரிழிவு நோய் வருவதற்க்கான காரணங்களும் நூல்களின் விபரமும்**

| | நோய் வரும் வழி | பரராஜசேகரம் 5ம் பாகம் | செகராஜசேகர வைத்தியம் | யூகி வைத்திய சிந்தாமணி | சரபேந்திர வைத்திய முறை | நோய்நாடல் நோய்முதல் | சித்த மருத்துவம் பொது | ஆத்மரட் சாமிருதம் | நூல்களின் எண் | விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அளவுகடந்த நெய்ப்பு உணவு, நெய் | √ | √ | √ | √ | √ | √ | √ | 7 | 100 |
| 2 | இறைச்சி | √ | √ | √ | √ | √ | √ | √ | 7 | 100 |
| 3 | பால் | √ | √ | √ | √ | √ | √ | √ | 7 | 100 |
| 4 | பெண்களுடன் அதிகம் கூடல் (மிகுகலவி) | √ | √ | √ | √ | √ | √ | √ | 7 | 100 |
| 5 | கொழுத்த மீன் | √ | | √ | √ | √ | √ | √ | 6 | 85.71 |
| 6 | இனிப்பு உணவு | √ | | √ | √ | √ | | | 4 | 57.14 |
| 7 | உடல் பருத்தல் | √ | | √ | √ | √ | | | 4 | 57.14 |
| 8 | நித்திரை இன்மை | √ | | √ | √ | √ | | | 4 | 57.14 |
| 9 | ஜய உணவு | √ | √ | | | √ | | | 3 | 42.85 |
| 10 | வேகாத பொருட்கள் | | | √ | √ | √ | | | 3 | 42.85 |
| 11 | மந்த உணவு | | | √ | √ | √ | | | 3 | 42.85 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | கள் | √ | | | | √ | √ | | 3 | 42.85 |
| 13 | அக்கினி மந்தம் | | | √ | √ | √ | | | 3 | 42.85 |
| 14 | பயம் | √ | | | | √ | | | 2 | 28.57 |
| 15 | தாய் தந்தை வழியால் | | | | | √ | √ | | 2 | 28.57 |
| 16 | வெயிலில் நடப்பவர் | √ | √ | | | | | | 2 | 28.57 |
| 17 | மெய்யில் எண்ணெய் பூசாதவர் | √ | √ | | | | | | 2 | 28.57 |
| 18 | சூரியனை வணங்காதவர் | | | √ | √ | | | | 2 | 28.57 |
| 19 | வேதத்தை தூஷிப்பவர் | | | √ | √ | | | | 2 | 28.57 |
| 20 | ஆலயத்தில் சலம் விட்டோர் | | | √ | √ | | | | 2 | 28.57 |
| 21 | பாலருக்கு ஒழித்து உண்ணல் | | | √ | √ | | | | 2 | 28.57 |
| 22 | ஈரம் சேர்ந்த சோறு | | | | | √ | | | 1 | 14.28 |
| 23 | சோம்பித்திரிதல் | √ | | | | | | | 1 | 14.28 |
| 24 | செறிந்த தூக்கம் | | | | | √ | | | 1 | 14.28 |
| 25 | விந்து சல மிகுதி | √ | | | | | | | 1 | 14.28 |
| 26 | பதனழிந்த உணவு | √ | | | | | | | 1 | 14.28 |
| 27 | இரசமும் புளிப்பும் அதிக உணவு | | √ | | | | | | 1 | 14.28 |
| 28 | புத்தரிசியும் வெல்லமும் | | | | | √ | | | 1 | 14.28 |
| 29 | வெப்புணவு | | | | | √ | | | 1 | 14.28 |

நூல் ஆய்வின் படி நீரிழிவு உண்டாவதற்கான காரணங்களாக 29 காரணங்கள் தொகுத்து கூறப்பட்டுள்ளன. 40மூ க்கு மேற்பட்ட நூல்களில் பின்வரும் காரணங்களால் நீரிழிவு உண்டாகும் என கூறப்பட்டுள்ளது.

1. அளவுகடந்த நெய்ப்பு உணவு, நெய்
2. இறைச்சி
3. பால்
4. பெண்களுடன் அதிகம் கூடல் (மிகுகலவி)
5. கொழுத்த மீன்
6. இனிப்பு உணவு
7. உடல் பருத்தல்
8. நித்திரை இன்மை
9. ஐய உணவு
10. வேகாத பொருட்கள்
11. மந்த உணவு
12. கள்
13. அக்கினி மந்தம்

## 4. நீரிழிவு நோயின் முற்குறிகுணங்கள்

பரராஜசேகரம் 5ம் பாகத்தில் சலரோகமுண்டாதற்கான முற்குறிகுணங்கள் என்ற தலைப்பின் கீழ் பின்வருவன கூறப்பட்டுள்ளன.

“ உடம்பில் சோர்வு தோன்றல், கனப்புக் கொள்ளுதல், வெயர்வை அதிகரித்தல், நாற்றமுண்டாதல், எந்நேரமும் படுத்து தூங்கவதில் இச்சையுண்டாதல், தாகமதிகரித்தல், நாக்கு வரளுதல், நாக்கிலே நெய்ப்பு தன்மையுண்டாதல், வாய் இனித்தல், குளிர்ந்த பானங்களிலும் உணவிலும் இச்சையுண்டாதல், தொண்டையும் நெஞ்சும் காய்ந்து போதல், மயிரும் நகமும் அதிகமாக வளருதல், மூத்திரத்தில் ஈ எறும்பு விழுதல்”

## 5. நீரிழிவு நோயின் பொது குறிகுணங்கள்

ஆய்வுக்கு எடுக்கப்பட்ட 09 நூல்களில்,**செகராஜசேகர வைத்தியம், யூகி வைத்திய சிந்தாமணி, சரபேந்திர வைத்திய முறைகள் (நீரிழிவு சிகிச்சை) தவிர ஏனைய 6 நூல்களிலும்** நீரிழிவின் குறிகுணங்கள் கூறப்பட்டுள்ளன. சிறப்பாக பரராஜசேகத்தில் பின்வரும் பாடல் மூலம்சலக்கழிச்சல் என்னும் தலைப்பின் கீழ் நீரிழிவின் குறிகுணங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

சீரழிக்கும் வயிறெரியும் வெளுந்தாள் வற்றுந்

தீன்மறக்கு நாவுலருந் தாக முண்டாம்

ஏரழிக்கு மிரவுசலந் தானே சோரு

மெழுந்துநடக் கரிதுகண்ணு மின்னிச் சோரும்

காரழிக்கும் பனிமழைக்குங் கடின மாகுங்

கால்வழிநீர் பெருகிமெத்தக் கவலை யாக்கும்

பேரழிக்கு நீரழிவிற் குணமீதென்று

பேசினா ராயுண்மறை யுணர்ந்த மேலோர்

**பொருள்:-** வயிறு எரியும், பசியின்மை, நாவுலரும், தாகம், எழுந்து நடக்க முடியாமை, கண் மங்கும், பனி மழைக்கு கடினமாகும், சிறுநீர் பெருகி ஓடும் என்பன நீரிழிவின் பொதுக்குறிகுணம் என மறைஉணர்ந்த மேலோர்.

ஆறு நூல்களிலிருந்தும் 29 பொதுகுறிகுணங்களின் தொகுப்பு அட்டவணை 3 இல் கூறப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: நீரிழிவு நோயின் பொது குறிகுணங்கள்**

| | குறிகுணங்கள் | பரராஜசேகரம் 5ம் பாகம் | அமிர்தசாகரம் | நோயநாடல நோய்முதல் | சித்த மருத்துவம் | வைத்திய சிந்தாமணி | ஆத்மரட் சாமிருதம் | நூல்களின் எண் | விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தாகம் | √ | √ | √ | √ | √ | | 5 | 83.33 |
| 2 | வியர்வை அதிகரித்தல் | √ | | √ | √ | √ | √ | 5 | 83.33 |
| 3 | நாக்கு வரளுதல் | √ | √ | √ | √ | | | 4 | 66.66 |
| 4 | அதிக நீர் இறக்கம் | √ | √ | √ | √ | | | 4 | 66.66 |
| 5 | உடல் வெளுக்கும் | | √ | √ | √ | | √ | 4 | 66.66 |
| 6 | உடல் சோர்வு, களைப்பு | √ | √ | | | | √ | 3 | 50 |
| 7 | அதிக தூக்கம் | √ | | | | √ | √ | 3 | 50 |
| 8 | மயிர் நகம் அதிகமாக வளருதல் | √ | | | | √ | √ | 3 | 50 |
| 9 | சலத்தில் ஈ எறும்பு மொய்த்தல் | √ | | √ | √ | | | 3 | 50 |
| 10 | உடல் எரிவு | | √ | | | √ | √ | 3 | 50 |
| 11 | உடல் வன்மை குறைதல், மெலிதல் | | | √ | √ | | √ | 3 | 50 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | உடலில் வேதனை,நோ | √ | √ | | | | | 2 | 33.33 |
| 13 | வாய் இனித்தல் | √ | | | | √ | | 2 | 33.33 |
| 14 | சீதப்பொருட்ளில் விருப்பம் | √ | | | | √ | | 2 | 33.33 |
| 15 | தொண்டையும் நெஞ்சும் காய்தல் | √ | | | | √ | | 2 | 33.33 |
| 16 | சலம் கடுத்தல் | √ | √ | | | | | 2 | 33.33 |
| 17 | உணவில் வெறுப்பு | | √ | | | | √ | 2 | 33.33 |
| 18 | அளவு கடந்த பசி | | | √ | √ | | | 2 | 33.33 |
| 19 | தூக்கமின்மை | | | √ | √ | | | 2 | 33.33 |
| 20 | மனக்கலக்கம் | | | √ | √ | | | 2 | 33.33 |
| 21 | மயக்கம் | | | √ | √ | | | 2 | 33.33 |
| 22 | சிறுநீர் கனக்கும் (நிறை) | | | √ | √ | | | 2 | 33.33 |
| 23 | மேனியில் தடிப்பு | √ | | | | | | 1 | 16.66 |
| 24 | கனப்பு கொள்ளல் | √ | | | | | | 1 | 16.66 |
| 25 | நாற்றம் உண்டாதல் | √ | | | | | | 1 | 16.66 |
| 26 | நாக்கில் நெய்ப்பு தன்மை | √ | | | | | | 1 | 16.66 |
| 27 | செவிகள் அடைக்கும் | | √ | | | | | 1 | 16.66 |
| 28 | ஆண்குறி சுருங்கல் | | | | | √ | | 1 | 16.66 |
| 29 | கண் மங்கும் | √ | | | | | | | 16.66 |

ஆய்வுக்கு எடுக்கப்பட்ட 09 நூல்களில், 06 நூல்களில் மாத்திரமே நீரிழிவின் குறிகுணங்கள் கூறப்பட்டுள்ளன.

அதில் 05 நூல்களிலும் தாகம், வியர்வை அதிகரித்தல் என்ற இரண்டும் குறிகுணங்களாக கூறப்பட்டுள்ளது.

04 நூல்களில் நாக்கு வரளுதல், அதிக நீர் இறக்கம், உடல் வெளுப்பு என்பன கூறப்பட்டுள்ளன.

03 நூல்களில் உடல் சோர்வு, களைப்பு, அதிக தூக்கம், மயிர் நகம் அதிகமாக வளர்தல், சலத்தல் ஈ, எறும்பு மொய்த்தல், உடல் எரிவு, உடல் வன்மை குறைதல், மெலிதல் போன்றன கூறப்பட்டுள்ளன.

50மூமேற்பட்டநூல்களில் நீரிழிவின் பொது குறிகுணங்களாக பின்வருவன இனங்காணப்பட்டுள்ளன.

1. தாகம்
2. வியர்வை அதிகரித்தல்
3. நாக்கு வரளுதல்
4. அதிக நீர் இறக்கம்
5. உடல் வெளுக்கும்
6. உடல் சோர்வு, களைப்பு
7. அதிக தூக்கம்
8. மயிர் நகம் அதிகமாக வளருதல்
9. சலத்தில் ஈ எறும்பு மொய்த்தல்
10. உடல் எரிவு
11. உடல் வன்மை குறைதல், மெலிதல்.

# 6. நீரிழிவு நோயின் வகைப்பாடு

**“பரராஜசேகரம் ஐந்தாம் பாகத்தில்”** நீரிழிவு நோயானது **மேகரேக நிதானத்தின்** கீழ் **நீரிழிவு மேகம்** எனக் குறிப்பிட்டு அதில்

பித்தத்தால் ஆறு,

வாதத்தால் நான்கு - தீராது

கபத்தால் பத்து என

‘‘மேனியுந் தடித்து நொந்து வேதினை யதிக மாகி

ஊனுடல் தாகந் தோன்றி யுண்டா நீரழிவு மேகம்

ஆனது பித்தந் தன்னி லாறதாஞ் சேற்ப னம்பத்

தீனமாம் வாத நான்கர மிதில்வாதந் தீரா நீரே’’

என்ற பாடல் மூலம் கூறப்பட்டுள்ளது.

பொருள்:-

மேனி தடித்தல், மேனியில் நோ, வேதனை அதிகரித்தல், தாகம் உண்டாதல் போன்ற அறிகுறிகளை காட்டும் நீரிழிவு மேகமானது பித்தத்தில் ஆறு, கபத்தில் பத்து, வாதத்தில் நான்கு என வகைபட்டு உள்ளது. அதில் வாதம் நான்கும் தீராது.

**“பரராஜசேகரம் ஐந்தாம் பாகத்திலும்”,“செகராஜசேகர வைத்தியம்”** என்னும் இரு நூல்களிலும் **நீரிழிவு நோயை தனித்துவமாக “சலக்கழிச்சல்**’’ என்ற பதத்தின் கீழ் 09 வகையாகக் கூறப்பட்டுள்ளது. அவையாவன

1. வாத சலக்கழிச்சல்,
2. பித்த சலக்கழிச்சல்,
3. சிலேற்பன சலக்கழிச்சல்,
4. வாத சிலேற்பனக் சலக்கழிச்சல்,
5. பிளவைச்சலம்,
6. பிரமேகவெட்டைச்சலம்,
7. இரத்த பித்த சலம்,
8. அவசலம்,
9. வெட்டைச்சலம் என்பனவாகும்.

இதேவேளை **பரராஜசேகரத்தில்** காணப்பட்ட 09 வகைகளில் அவசலம், வெட்டைசலம் என்ற பெயருக்கு பதிலாக **செகராஜசேகரத்தில்**

வாத வெட்டைக் கழிச்சல்,

வெப்புச் சலம் என்ற பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

(அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளது)

இதேபோல் **பரராஜசேகரத்தில் வேறுபிரதியின் படி** எனக் குறிப்பிட்டு **சலக்கழிச்சலை**

- ✓ வாதத்தில் நான்கு,
- ✓ பித்தத்தில் ஆறு,
- ✓ கபத்தில் பத்து

என இருபது வகையாக வகுத்துள்ளனர்.

**மேகசலத்தின் பேதம்** என்ற தலைப்பின் கீழ் பத்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**"நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு","சித்த மருத்துவம் பொது"**ஆகிய இரண்டிலும்

மேகநீர் என்ற தலைப்பிலும்,**“யூகி வைத்திய சிந்தாமணில்”**மேகரோக நிதானம் என்னும் தலைப்பிலும்,**“சரபேந்திர வைத்தியமுறைகள் (நீரிழிவு சிகிச்சை)”**ல் சலம் இருபதுக்கும் பேர் உற்பத்தி என்ற தலைப்பிலும்,**“சிகிச்சாரத்னதீபம் இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி”**ல் மேக ரோக இலம்பகம் என்னும் தலைப்பிலும் **நீரிழிவு நோயை 20** வகையாக வகுத்துள்ளனர். அதாவது

வாதத்தில் நான்கு,

பித்தத்தில் ஆறு,

கபத்தில் பத்தாகும்.

இதை**“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு”,“யூகி வைத்திய சிந்தாமணி”,“சரபேந்திர வைத்தியமுறைகள் (நீரிழிவு சிகிச்சை)”,**ஆகிய நூல்களில் கீழ் வரும் பாடல் கூறப்பட்டுள்ளது.

“வசனித்த மேகமது இரண்டு பத்து

வாதத்திற் பிறந்த சலம் நாலே யாகும்

பிசனித்த பித்தத்திலுற்ப வித்த

பேரான சலந்தானு மாறு மாகும்

தெசனித்த சேட்டுமத்தில் உற்ப வித்த

சீரான சலந்தானும் பத்தே யாகும்

இசனித்த இதனுடைய குணாகுணங்கள்

அழிவான உற்பத்தி யியம்பக்கேளே”

**“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு”,“சித்தமருத்துவம் பொது”** எனும் இருநூலிலும் **அகத்தியர் 1200ஐ ஆதாரம் காட்டி**

“உட்டிண ரோகத் தாலும்

உறும் பெரும் பசியி னாலுங்

கட்ட விழ் கோதை மாதர்

கலவி மட்டிலா மையலாலும்

முட்டநா நாலு மாறும்

மும்மூன்று மொன்று மொன்று

திட்டமாய் வருவ தென்று

திருமுனியருளிச் செய்தார்”

என்ற பாடல் மூலம் வகை கூறப்பட்டுள்ளது.

பொருள்:-

வெப்பு பெரும்பசி கலவி இவற்றால் வரும் எனக் கூறப்பட்டுள்ளது.

**“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு”**என்னும் நூலில் **கையெழுத்துப்பிரதியை ஆதாரம் காட்டி** கீழ் வரும் பாடல் மூலம் வகைகள் கூறப்பட்டுள்ளது.

“நீரிழிவு நோயை நிகழ்த்துவர் மேக மென்றே

நாராழியு ம.:.துவளி நான்காகக் சாரழிந்த

பித்த நீராறாகப் பேரையும் நீர் பத்தாம்

மொத்த மிருபான் மொழி”

பொருள்:-

மேகம் எனக் கூறும் நீரிழிவு நோய் வாதத்தில் நான்கு பித்தத்தில் ஆறு கபத்தில் பத்து என வகுத்துள்ளனர்

**“பதினென் சித்தர் அருளிச்செய்த ஆத்மரட்சாமிருதம் என்னும் வைத்திய சாரசங்கிரதம்”**என்னும் நூலில் **நீரிழிவின் விபரம்** என்ற தலைப்பின் கீழ் **24 வகையாக** பிரித்து கூறியுள்ளனர். அவையாவன

வாதத்தில் 03, வாத பித்தத்தில் 04, பித்தத்தில் 03, பித்த வாதத்தில் 02, சிலேற்பனத்தில் 04, சிலேற்பன பித்தத்தில் 02, சிலேற்பன வாதத்தில் 05 என்பனவாகும்.

அதே நூலில் **பிரமேக நீரின் விபரம்** என்னும் தலைப்பின் கீழ் பித்தத்தில் ஆறு வாதத்தில் நான்கு கபத்தில் பத்து எனக் கூறப்பட்டுள்ளது.

**அட்டவணை 4 : நீரிழிவு நோயின் வகைப்பாடும் நூல்களின் விபரமும்**

| | | பரராஜ சேகரம் | செகராஜ சேகரம் |
|---|---|---|---|
| 1 | வாத சலக்கழிச்சல் | √ | √ |
| 2 | பித்த சலக்கழிச்சல் | √ | √ |
| 3 | சேற்பன சலக்கழிச்சல் | √ | √ |
| 4 | வாத சேற்பன சலக்கழிச்சல் | √ | √ |
| 5 | பிரமேக வெட்டை சலக்கழிச்சல் | √ | √ |
| 6 | வாத வெட்டை சலக்கழிச்சல் | | √ |
| 7 | இரத்த சலக்கழிச்சல் | √ | √ |
| 8 | வெப்பு சலக்கழிசல் | | √ |
| 9 | பிளவை சலக்கழிச்சல் | √ | √ |
| 10 | வெட்டை சலம் | √ | |
| 11 | அவசலம் | √ | |

பித்தத்தால் ஆறு,

வாதத்தால் நான்கு - தீராது

கபத்தால் பத்து என 20 வகைப்பிரிவுகளும் ஆய்வுக்கு எடுக்கப்பட்ட நூல்களின் விபரமும் அட்டவணை 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 5 - ஒன்பது நூல்களிலும் இருபது வகை மேகத்தின் பெயர்கள்

| எண் | பரராஜசேகரம் 5ம் பாகம் | யூகி வைத்திய சிந்தாமணி | சரபேந்திர வைத்திய முறை | நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | சித்த மருத்துவம் போது | வைத்திய சிந்தாமணி | ஆத்மரட் சாமிருதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | நீரிழிவு மேகம் | மேகரேக நிதானம் | சலம் இருபதுக்கும் பேர்உற்பத்தி | மேகநீர் | மேகநீர் | மேகரோக இலம்பகம் | மேகரோக படலம் |
| 1 | மதுமேக குணம் | ஆச்சிய மேகம் | ஆச்சிய மேகம் | நெய் மண நீர் ஆச்சிய மேகம் | நெய் மண நீர் ஆச்சிய கந்தி மேகம் | ஆச்சிய கந்தி மேகம் | வாத பிரமேக நீர் |
| 2 | திருணி மேகம் | சுத்த மேகம் | சுத்த மேகம் | பசு மண நீர் சுத்த மேகம் | பசு மண நீர் சுத்த மேகம் | சுத்த மேகம் | |
| 3 | இரத்த மேகம் | பிராமிய மேகம் | பிராமிய மேகம் | ஊண் மண நீர் பிராமிய நீர் | சீழ் நீர் பிராமிய நீர் | வாத பிரமிய மேகம் | |
| 4 | சோக மேகம் | மாங்சரவி மேகம் | மாங்சரவி மேகம் | இளமறி கொழுப்புமண நீர் மாங்சரவி மேகம் | சதை நீர் மாங்சரவி மேகம் | மாங்சரவி மேகம் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | அப்பிய மேகம் | அப்பிய மேகம் | அப்பிய மேகம் | யானை மத நீர் அப்பிய மேகம் | யானை கொழுப்புமணநீர் அப்பிய மேகம் | அப்பிய மேகம | பித்த பிரமேக நீர் |
| 6 | சுரேணி மேகம் | அபிரம் மிய மேகம் | அபிரம்மிய மேகம் | கற்றாளைம நீர் அபிரம்மிய மேகம் | கற்றாளை மண நீர் | பித்த பிரமிய மேகம் | |
| 7 | நீல மேகம் | சாம்பீரண மேகம் | சாம்பீரண மேகம் | சுண்ண மண நீர் சாம்பீரண மேகம் | சுண்ண மண நீர் சபிரண மேகம் | சவிரண மேகம் | |
| 8 | அந்தர மேகம் | மதுமிய மேகம் | மதுமிய மேகம் | தித்திப்பு நீர் மதுமேகம் மதுமிய மேகம் | இனிப்பு மேகம் | மதுமேகம் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | அவிட்டன மேகம் | சாத்திய மேகம் | சாத்திய மேகம் | பளிங்கு நீர் சாந்திர மேகம் சாத்திய மேகம் | பளிங்கு நீர் | சாந்திர மேகம் | பித்த பிரமேக நீர் |
| 10 | மதங்க மேகம் | ஆவிருத மேகம் | ஆவிருத மேகம் | முயற்குருதி நீர் ஆர்க்க மேகம் ஆவிருத மேகம் | முயற் குருதி நீர் | ஆர்க்க மேகம் | |
| 11 | சிக்காய் மேகம் | வசா மேகம் | வசா மேகம் | நிணநீர்மிதக்கும் நீர் வசாநீர் வசா மேகம் | வசா மேகம் ஐய நீர் | வசா மேகம் | கப பிரமேக நீர் |
| 12 | மத மேகம் | உத்தம மேகம் | உத்தம மேகம் | துய்மை நீர் தெளி நீர் உத்தம மேகம் | துய்மை நீர் | உத்தம மேகம் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | ஆனந்த மேகம் | மச்ச மேகம் | மச்ச மேகம் | மூளை உருக்கு நீர் மூளை நீர் மச்ச மேகம் | மூளை நீர் | மச்ச மேகம் | கப பிரமேக நீர் |
| 14 | மகா மேகம் | ஆகிக மேகம் | ஆகிக மேகம் | ஆதிக்க மேகம் | இளநீர் | ஆதிக்க மேகம் | |
| 15 | காச மேகம் | சுராரி மேகம் | சுராரி மேகம் | கள் நீர் சுரா மேகம் | உள் நீர் | சுரா மேகம் | |
| 16 | சுக்கில மேகம் | சுக்கில மேகம் | சுக்கில மேகம் | தவள நீர் வெண்ணீர் சுக்கில நீர் | தவள நீர் வெண்ணீர் சுக்கில மேகம் | சுக்கில மேகம் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | வெறி மேகம் | உதக மேகம் | உதக மேகம் | கழு நீர் | கழு நீர் | உதக மேகம் | கப பிரமேக நீர் |
| 18 | தாக மேகம் | பித்தாதி மேகம் | பினானி மேகம் | பிரச மேகம் தேன் நீர் | பிரச மேகம் தேன் நீர் | பிரச மேகம் | |
| 19 | லவண மேகம் | லவண மேகம் | லவண மேகம் | சார மேகம் உப்பு நீர் | சார மேகம் உப்பு நீர் | லவண மேகம் | |
| 20 | புலால் மேகம் | தயித்திய மேகம் | தயித்திய மேகம் | கவிச்சி நீர் இறைச்சி நீர் | கவிச்சி நீர் தயித்திய மேகம் | தயித்திய மேகம் | |

செகராஜசேகர வைத்தியம், அமிர்தசாகர பதார்த்த சூடாமணியும் வைத்திய தெளிவும் அனுபந்ததுடன் என்னும் இரு நூல்களிலும் இவ் 20 வகை குறிப்பிடப்படவில்லை.

நூல் ஆய்வின் படி ‘‘**பரராஜசேகரத்தில்**’’ அப்பியமேகம், சுக்கில மேகம், லவணமேகம் தவிர ஏனைய 17 வகைகளும் வேறு எந்த நூல்களிலும் கூறப்படவில்லை.

**“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு”,“யூகி வைத்திய சிந்தாமணி”,“சரபேந்திர வைத்தியமுறைகள் (நீரிழிவு சிகிச்சை)”,‘‘சித்த மருத்தவம் பொது”**,ஆகிய நூல்களில் ஒரே வகையான பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

# 7. நீரிழிவு நோயின் வகைகளின் குறிகுணங்கள்

நீரிழிவு நோயின் வகைகள் தோஷத்தின் அடிப்டையில் 3ஆக பிரிக்கப்பட்டு அவற்றின் குறிகுணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 7.1 வாத நீரிழிவு

**"பரராஜசேகரத்தின் ஐந்தாம் பாகத்தில்"** நீரிழிவு,**மேகரோகநிதானம்** என்னும் தலைப்பில் வாதநீரில் ஒருவகையான **மதுமேக குணம்** என்ற உபதலைப்பில் அதன் குணம் விபரித்து கூறப்பட்டுள்ளது.

"விதமிகு வாத நாலின் மேகநீர் கனலே போன்றும்

வதசினை யுருளை போன்று மடிக்கடி நீரி றங்கம்

புதியதே னிரத முத்துப் போல நீர் நுரைத்தி றங்கும்

அதிகமா ருத்திற் றீரா வசாத்திய மென்ன லாமே"

பொருள்:-

வாதம் நான்கு வகை. இதில் மேகநீரில் அடிக்கடி நீரிறங்கும்,நீர் முத்துப்போல் நுரைத்திறங்கும், இவ் குறிகள் அதிகமாயின் அசாத்தியமாகும்.

இதே நூலில் **வாத சலக்கழிச்சல்** என்னும் தலைப்பின் கீழ்

பாடல் 01

“உளைந்திடுங் கடுத்துக் குத்தி யுண்டியு மொறுத்தாள் வற்றி

விளைந்தநா வரண்டுவெப்பும் வெட்டையுஞ் சலமும் முண்டாய்க்

களைந்திடுஞ் சரீரந் தன்னைக் கழிந்திடுஞ் சலமு மிஞ்சி

அனைத்திடுஞ் சரீர நீர்தா னதறெட்டிற் கொலையுஞ் செய்யும்”

பொருள்:-

வயிறு உளையும், குத்தும், உணவில் விருப்பமின்மை, உளைவு, நா வரளும், வெப்பு, வெள்ளை, களைப்பு, அதிகமாய் சலம் கழிதல், இறுதியில் கொலையும் செய்யும்.

பாடல் 02

“ஏதமுற வயிறெரியும் வேர்வை யுண்டா

மெழுந்துநடக் கரிதுகண்ணு மின்னிச் சோரும்

சீதநீர் மோரிளநீர் தாக முண்டாந்

தீன்மறக்கு நாவுலரு முளைவுண்டாகும்

சேதமுற நீர்தெளிந்து நுரையில் லாமற்

றியக்கமுறப் பகலிரவு கழிந்தாள் வற்றி

வாதைமிகுங் காதடைக்கு முறக்கம் வாரா

வாதசலக் கழிச்சலென வகுத்தா ரன்றே”

பொருள்:-

வயிறு எரிவு, வேர்வை, எழுந்து நடப்பது இயலாமை, கண் பார்வை குறையும், குளிர் நீர், மோர்,இளநீர் இவற்றில் விருப்பம், உணவு மறக்கும், நா உலரும், உளைவு, தெளிவாக நுரையில்லாமல் சலம் பகல், இரவாக கழியும், உபாதை மிகும், காதடைக்கும், உறக்கம் வராது, போன்ற குறிகுணம் இருந்தால் வாதசலக்கழிச்சல் என கூறப்பட்டுள்ளது.

பாடல் 03

''இனித்திடு மெறும்பீ மொய்க்கு மிரவிள நீரா மென்னக்

குளித்திடச் சலங்க ழிந்தே கொதித்துநா வரண்டு தாகம்

நனித்துறப் பெலனுங் குன்றி நாவுலர்ந்தயர்ந்து சோரும்

பனித்திடு வாத நீர்தான் படுமுயிர்க் கால னாமே''

பொருள்:-

சலம் இனிக்கும், அதனால் ஈ, எறும்பு மொய்க்கும், இளநீர் போல் சலம் குளிர்ந்து வெளியேறும், நா வரளும், நா உலரும், தாகம், உடல் பலன் குன்றும், சோர்வு இவ்வாறான குறிகுணம் ஏற்படின் அது காலனுக்கு சமனாகும்.

இவ்மூன்று பாடல்கள் மூலம் நீரிழிவின் குணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட பாடல் 01, 02 **"செகராஜசேகர வைத்தியத்திய நூலில்"வாத சலக்கழிச்சலின்** கீழ்

மூன்றாவது பாடலாக கீழ் வரும் பாடலும் கூறப்பட்டுள்ளது.

“வயிறெரியும்ஊடம்புவெளுத்தாளும்வற்றும்
மதிமறக்கும்நவுலருந்தாகமுண்டாம்
எயிறுவிழுமரவுசலந்தானேசோரும்
எழுந்துநடக்கரிதுதுணித்தேதமாகும்
கயில்வெயிற்கும்பனிமழைக்குங்கடினமாகுங்
கால்வழிநீர்பெருகுமெத்தக்கவலையாகும்
பெயரளிக்கும்நீரிழிவின்குணமீதென்னப்
பேசினாராயுள்மறைபேசினாரே”

பொருள்:-

வயிறு எரியும், உடம்பு வெளுக்கும், மறதி ஏற்படும், நாவுலரும், தாகம், அதிகமாக சலம் போகும், சோரும், எழுந்து நடக்க கடினம், வெயில் மழை பனிக்கு கடினமாகும்,கால் வழியாக நீரோட மிக கவலையாகும் போன்ற குறிகுணத்தை கொண்டது.

**“பதினென்சித்தர் அருளிய ஆத்மரட்சாமிருதம் என்னும் வைத்திய சாரசங்கிரத்தில்”** நீரிழிவின் வகையான **வாதநீரிழிவின் மூன்றின் குணம்** என்னும் தலைப்பின் கீழ்

“நீர் மாம்பூ வாசமாயும், ருசி புளிப்பாயும், குங்குமப்பூ வாசமாயும், காடி வாசமாயும், ருசி கைப்பும் புளிப்பாயும் இருக்கும” எனக் கூறப்பட்டுள்ளது.

## 7.2 பித்த நீரிழிவு

**“பரராஜசேகரத்தில் ஐந்தாம் பாகத்தில் “சலக்கழிச்சல்” என்னும் தலைப்பின்** கீழ் **வேறுபிரதியை ஆதாரம் காட்டி**

“பித்த சலம் 6ம் பொன்னிறமாயும், மஞ்சள் நிறமாயும் இரத்த நிறமாயுமிருக்கும். அவை முறையே 1- ஆனைமதம்போல் நாறும், 2- கற்றாளை பொல் நாறும் 3- அழல் நாறும், 4- நீர் பட்ட இடமெல்லாம் எரியும், 5- எறும்பரிக்கும், 6- கடுகடுத்து நீரிறங்கும் இவை ஆறும் விரைவில் மருந்து செய்தால் தீரும். நாட்சென்றால் தீராது. எனக் கூறப்பட்டுள்ளது.

**“யூகி வைத்திய சிந்தாமணி”,“சரபேந்திர வைத்திய முறை(நீரிழிவு சிகிச்சை)”** என்னும் இரு நூல்களிலும் பித்த வகைக்குள் ஒன்றான **சாம்பீரணமேகத்தின் குணம்** நீரிழிவின் குணத்துடன் ஒத்து இருப்பது கீழ் வரும் பாடல் மூலம் புலப்படுகின்றது.

“பண்பாகச் சுண்ணாம்பு அழலே நாறும்
படியுமே யடிதனிலே நீறு போல
நண்பாக வேளைக்கு நானாழி தானும்
நாறியே யிறங்குமிக வெரும் பரிக்கும்
கண்பார்க் கக்காச்சினாற் சுண்ண நீரும்
கனமாக படியுமே யடியிற்றா னும்
தண்பாகக் கண்டசல மிரண்டா மாண்டிற்
சாகுவரே சாம்பீர்ணத் தண்மை தானே”

பொருள்:-

சுண்ணாம்பு மணம் போல் சலம் நாறும், அதை காய்ச்சி அல்லது காய்ச்சாவிடின் கண்ணால் பார்க்க சுண்ணாம்பு நீறு போல அடியில் படியும். வேளைக்கு 4 படி சலம் மணத்துடன் கழியும், எறும்பு ஈ மொய்க்கும், இவ்வாறான குறிகுணம் காட்டின் இரண்டு ஆண்டில் இறப்பர். இதுவே சாம்பீரண மேகத்தின் குணமாகும்.

இதே போல் **மதுமியமேகத்தின்** குணத்தையும் ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கின்றது. இதை கீழ் வரும் பாடல் விளக்குகின்றது.

''தன்மையாய்ச் சலந்தானும் பசுப்பு மஞ்சள்
தானிறங்கு பீசமுங்கோ சமுங்க டுக்கும்
அண்மையா யடிக்கடிக்கு நீரிறங்கும்
அடிக்கடிக்கு அரைநாழி தனிலே காணும்
வெண்மையா யடியதனில் தான் பிடிக்கும்
மிக்கான சடம்வெளுத்து மேனி கண்ணும்
பன்மைபாய்ப் பஞ்சவாண் டதனிற் கொல்லும்
பகர்கின்ற மதுமியத்தின் பாங்கு தானே''

பொருள்:-

சலம் பசுப்பு மஞ்சள் நிறமாக இறங்கும், பீசமும் கோசமும் கடுக்கும்,அரை நாழிகைக்கு ஒருதடவை அடிக்கடி நீரிறங்கும். நீரை தெளிந்த நீருடன்

பார்த்தால்வெண்மை நிறமாய் படியும், மேனி கண் வெளுக்கும்.இவ்வாறான குறிகுணத்தை காட்டின் 5 ஆண்டில் கொல்லும்

மேலே கூறப்பட்ட இருபாடல்களும் **“சித்த மருத்தவம் பொது”,“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம்இரண்டு”** என்னும் இருநூல்களிலும் **மேகநீர்** என்ற தலைப்பின் கீழ்

**சவ்விரண மேகத்தை சுண்ண மணநீர்** என்ற பெயருடனும்**மதுமிய மேகத்தை இனிப்பு மேகம், தித்திப்பு நீர்,மதுமேகம்** என்ற பெயர்களினாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்நூலில் பாடலின் இறுதி வரியானது

“பகிர்கின்ற மதுமேகத்தின் பங்கு தானே” எனக் குறிப்படப்பட்டுள்ளது.

**“நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டில்” கையெழுத்துப்பிரதியை ஆதாரம் காட்டி**

**சுண்ண மணநீருக்கு**

“அழலால் வரும் நீராறினில் ஆகுஞ்சுண்ண மணநீர்

அளவேயொரு வேளைக்க.'.து

தாகும்படி நான்காய்

கழறும்பொருள் மணமுமதன் காரம்பெறு முறையில்

காய்ச்சாததை விடினுந்தழல்

காய்ச்சிப் பிறகதனின்

பழகுனிலை கண்டாற்கடர்த் தடியிற் சுண்ண நீராய்ப்

படியும்வண் டற்புரையக்

கனமாகப் படிநீரில்

பழகுஞ்சிறு பெரிதாமெறும் புகள்சூழ்ந்து பருகப்

பார்ப்பாயி வனீராண்டினிற்

பார்நீப்பவ னாமால்''

என்றும்

**தித்திப்பு நீருக்கு**

நெருப்பால் வரும் நீராறினில்

தித்திப்பிது நீர்கேள்

அரிப்பா யடிகடிக் காற்படி

அரிதேன்பசு மஞ்சள்

தரிப்பாமடி வெண்மையைக் குறி

சாறு விதைகடுப்பாம்

இறுப்பாமுடல் வெளுப்பாமிவ

னிறப்பாண் டைந்திலறியே

என்றும்கூறப்பட்டுள்ளது.

**“சிகிச்சாரத்னதீபம் இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி”**என்னும்நூலில் **சவிரணமேகத்திற்கு**

“சிறுநீரானது சுண்ணாம்பை யொத்த காரமும் துர்நாற்றமும் உள்ளதாய் வேளைக்கு ஒரு நாழியளவு இறங்கும். நீர் பாய்ச்சிய இடத்தில் ஈ, எறும்பு அரிக்கும். இதற்கேற்ப சிகிச்சை செய்யத்தவறின் இரண்டாம் வருடத்தில் கெடுதியை உண்டுபண்ணும்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் பித்த வகைக்குள் ஒன்றாக **மதுமேகம்** என்ற பெயர் கூறப்பட்டு அதில்

“சிறுநீரானது மஞ்சள் நிறமாயும் பீசத்திலும் கோசத்திலும் கடுத்தலுடன் அடிக்கடி அரைநாழி அளவு நீரிழங்கும். அதனை காய்ச்சிப் பார்க்க அடியில் வெண்ணிறமுடைய வண்டல் பற்றும் அப்போது மேனி கண் முதலியவைகள் வெளுக்கும். இதற்கேற்ற சிகிச்சை செய்யத்தவறின் ஐந்தாவது வருடத்தில் கெடுதியை உண்டு பண்ணும். எனக் கூறப்பட்டுள்ளது.

இது மேலே கூறப்பட்ட பாடலுக்கு பொருள் சொல்லப்பட்டது போல் உள்ளது.

**“பதினென்சித்தர்கள் அருளிச் செய்த ஆத்மரட்சாமிருதம் என்னும் வைத்திய சாரசங்கிரதத்தில்”பித்த நீரிழிவுமூன்றின் குணம்** என நீரின் தன்மையை பின்வருமாறு கூறப்பட்டு இருக்கின்றது.

“நீர் பானகம் வாசமாயும், ருசி கைப்பாயும் உப்பு நாற்றமாயும், ருசி வப்புதரித்தும், மல்லிகைப்பூ வாசமாயும், ருசி யெரிப்பாயும் இருக்கும்”

## 7.3 கப நீரிழிவு

**"பரராஜசேகர ஐந்தாம் பாகத்தில்" சலக்கழிச்சலில்வேறுபிரதியை ஆதாரம் காட்டி சிலேற்பன சலம்** 10ம் வெளுத்திருக்கும் அவை முறையே

1 கருபஞ்சாறு போலும் தேன்போலும் வாய்நீர் போலிருக்கும்

2 இளநீர் போலிருக்கும்

3 இரத்தம் போலிருக்கும்

4 உப்பு கரைத்தது போலிருக்கும்

5 மாக்கரைத்தது போலிருக்கும்

**6 வெளுப்பாய் தோன்றி தித்திக்கும்**

**7 நீர் பட்ட இடமெல்லாம் எறும்பரிக்கும்**

8 கடுத்துக் கடுத்து கழியும்

9 கருபஞ்சாறு போலிருக்கும்

10 குதிரை மூத்திரம் போலிருக்கும் உள்ளங்கை உள்ளங்கால் எரியும் உரோமத்துவார மெல்லாமுண்டாயிருக்கும்.

இதில் 6,7 வகைகளின் குணம் நீரிழிவின் குணத்தை ஒத்துள்ளது.

சிலேற்பன வகையின் கீழ் **"யூகி வைத்திய சிந்தாமணியில்"பித்தாதி மேகம்** எனவும்,**"சரபேந்திர**

**வைத்திய முறைகள்(நீரிழிவு சிகிச்சையில்)" பினானி மேகம்** எனவும் கூறி ஒரே பாடல் குறிப்பிடப்பட்டுள்ளது.

"விளம்பவே தேன்போல மிகவி றங்கும்

மிக்கான தேன்வர்த்த நாற்ற மாகும்

அளம்பவே மெழுகுபோ லடிய னிற்கும்

அதிகமா யீயெறும்பு மிகவே மொய்க்கும்

குளம்பவே வேளைக்குக் குறணி யாகும்

குறிகண்ட வைந்துமா தத்திற் கொல்லும்

தளம்பவே சரீரத்தில் மதுத்தா னாறும்

தனித்ததோர் பிநாறியென்ற மேகந் தானே"

மேலே கூறப்பட்ட பாடலானது **"சித்த மருத்துவம் பொது","நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு"** என்னும் இரு நூல்களிலும் **தேன்நீர் (பிரச மேகம்)** என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

**"நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு"** என்ற நூலில் **கையெழுத்துப்பிரதியை ஆதாரம் காட்டி** கீழ் வரும் பாடல் கூறப்பட்டுள்ளது.

"ஜயந்துறு நீர்பத்தினின் ஆகுந்தே னீரும்

ஆகும்படி நான்காகியே யமரும்எறும் பீயும்

தோயுமத னிறம்வாசைன கனமுஞ்சுவை யட்டின்

தூய்பாகினையொப்பாகியே கொப்புளையு முடலை

ஏயுந்துயர் செய்தேயிழி வுமன்னிற மஞ்சள்

எய்தும்பசு மைபோல்விரை யடியில்வரு நோவும்

பாயும்வினை யடிதண்டினி யந்நீரினைப் பிடித்துப்

பார்க்கிலடி வெண்மைப் பொடி யாமையாமதிற் சாவாம்

மேலே கூறப்பட்ட இருபாடலுக்குமான பொருள்:

பிரச மேகம் என்னும் தேன்நீர் நோயில் இழியும் சிறுநீரானது வேளைக்கு நாலுபடியளவகும். அதன் நிறம், மணம், கனம்,சுவைஇவையாவும் தேனையொத்திருக்கும். அதை காய்ச்சின் வெல்லப்பாகின் மணம் வீசும். கொப்பூழையும் உடலையும் குடிலமாக்கிப் பாதிக்கும். இத்துடனிழிகின்ற நீர் மஞ்சள் நிறமும் பசுமை போலுமிருக்கும் கோசத்திலும் பீசத்திலும் வீக்கம் உண்டாகும். இந்நீரை பிடித்து காய்ச்சி வைத்தால் வெண்மையான மாவைபோல் படிந்திருக்கும். இன் நோய் கண்டவன் ஐந்து மாதத்தில் உயிரழப்பான்.

இதே போல் "**சிகிச்சாரத்னதீபம் இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணியில"** பிரசமேகத்தில்

"சிறுநீரானது தேன்போல வேளைக்கு குறுணியளவு இறங்கும். சோதித்துப் பார்க்க அடியில் மெழுகைப்போல் வண்டல் நிற்கும் நீர் பாய்ச்சிய இடத்தில் ஈ, எறும்புகள் மொய்க்கும். இதற்கு ஏற்றபடி

சிகிச்சை செய்யத் தவறின் ஐந்தாவது மாதத்தில் கெடுதியை உண்டுபண்ணும்''

என கூறப்பட்டுள்ளது.

**"பதினென் சித்தர்கள் அருளிய ஆத்மரட்சாமிருதம் என்னும் வைத்திய சாரசங்கிரதத்தில்" சிலேற்பன பிரமேகநீர்பத்தின்குணம்** என்னும் தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''அடிக்கரும்பின் சாறுபோலும் அரும்புனல் போலும் மாவைக்கரைத்தது போலும் பன்னீர் போலும் தயிர் பால் தண்ணீர் போலும் சக்கரைப்பாகு போலும் தேன் பாகு போலும் கடுத்திறங்கும். எறும்புவிழும் ரசம் போல் நீரிறங்கி நெய் மிதக்கும் மணக்கும்.''

இதே நூலில் **சிலேத்தும நீரழிவு நாலின் குணம்** என்ற தலைப்பின் கீழ் நீரின் தன்மையை

''தாழைமலர் போலும் சணல்போலும் எலுமிச்சம் பழம் போலும் உதிரம் போரும் வாசனையாயும் ருசியினிப்பாயும் புளிப்பாயிருக்கும். ருசி சுண்ணாம்பு வாசனையாயும் ருசி சுண்ணாம்பு போலெரியும்''

எனக் கூறப்பட்டுள்ளது.

**அட்டவணை 06 : நீரிழிவு நோயின் வகைப்பாடும் (தோஷ அடிப்படையில்) அவற்றின் குறிகுணங்களும்**

| இல | குறிகுணங்கள் | தோஷங்களினால் உண்டாகும் நீரிழிவு | | |
|---|---|---|---|---|
| | | வாதம் (4) | பித்தம் (6) | கபம் (10) |
| 1 | அடிக்கடி அதிக நீரிறங்கும் | √ | | |
| 2 | அதிகளவு நீர் இறங்கும் | √ | √ | |
| 3 | கடுகடுத்து நீர் இறங்கும் | | √ | √ |
| 4 | சலத்தின் சுவை - இனிப்பு | | √ | |
| 5 | ஈ எறும்பு மொய்க்கும் | √ | √ | √ |
| 6 | நீர் முத்து போலிருக்கும் | √ | | |
| 7 | நீர் தேன் போலிருக்கும் | | | √ |
| 8 | நீர் அடிக்கரும்பின் சாறு, மாவைகரைத்த கலவை, பால் தண்ணீர், தயிர், பன்னீர் போலிருக்கும் | | | √ |
| 9 | நீர் நுரைத்திறங்கும் | √ | | |
| 10 | சலம் குளிர்ந்துவெளியேறும் | √ | | |
| 12 | சலமணம் - ஆனைமதம், கற்றாளை மணம் | | √ | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | சலமணம் - மாம்பூ காடி குங்குமப்பூ | √ | | |
| 14 | சலமணம் - சுண்ணாம்பு மணம் | | √ | |
| 15 | சலம் - துர்நாற்றம் | | √ | |
| 16 | சலமணம் - காய்ச்சின் வெல்லப்பாகின் மணம் | | | √ |
| 17 | சலமணம் - பானகம், உப்பு, மல்லிகைப்பூ | | √ | |
| 18 | சலத்தின் சுவை - கைப்பு புளிப்பு | √ | | |
| 19 | சலநிறம் - பொன் மஞ்சள் இரத்தம் | | √ | |
| 20 | சல நிறம் - பசுப்பு மஞ்சள் | | √ | |
| 21 | சல நிறம் - வெளுப்பு | | | √ |
| 22 | சலத்தின் சுவை - கைப்பு வப்புதரித்தும் | | √ | |
| 23 | சலத்தின் சுவை - இனிப்பு, புளிப்பு | | √ | |
| 24 | சலம் பட்ட இடம் எரியும் | | √ | |
| 25 | வயிறு உளையும், குத்தும், எரிவு | √ | | |
| 26 | உணவில் விருப்பமின்மை | √ | | |
| 27 | நா வரளும் | √ | | |
| 28 | தாகம் | √ | | |
| 29 | வெப்பு | √ | | |
| 30 | வெள்ளை | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | களைப்பு | √ | | |
| 32 | வேர்வை | √ | | |
| 33 | எழுந்து நடக்க இயலாமை | √ | | |
| 34 | கண் பார்வை குறைதல் | √ | | |
| 35 | சீத உணவில் விருப்பம் | √ | | |
| 36 | காதடைக்கும் | √ | | |
| 37 | உறக்கம் வராது | √ | | |
| 38 | உடல் பலம் குன்றல் | √ | | |
| 39 | உடல் வெளுக்கும் | √ | √ | |
| 40 | கண் வெளுக்கும் | | √ | |
| 41 | மறதி | √ | | |
| 42 | வெயில் மழை பனிக்கு கடினம் | √ | | |
| 43 | பீசம் கோசம் கடுக்கும் | | √ | |
| 44 | பீசம் கோசம் வீக்கம் | | | √ |
| 45 | உளைவு | √ | | |
| 46 | சோர்வு | √ | | |

**அட்டவணை 07 : நீரிழிவு நோயின் வகைகளின் குறிகுணங்களுக்கான நூல்களின் விபரம்**

| இல | நீரிழிவு நோயின் வகைகளின்குறிகுணங்களின் தொகுப்பு | பரராஜசேகரம் 5ம் பாகம் | செகராஜசேகர வைத்தியம் | அமிர்தசாகரம் | யூகி வைத்திய சிந்தாமணி | சரபேந்திர வைத்திய முறை | நோய்நாடல் நோய்முதல் | சித்த மருத்துவம் பொது | வைத்திய சிந்தாமணி | ஆத்மரட் சாமிருதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அடிக்கடி அதிக நீரிறங்கும் | √ | √ | | √ | √ | √ | √ | √ | |
| 2 | அதிகளவு நீரிறங்கும் | √ | | | √ | √ | √ | √ | | |
| 3 | கடுகடுத்து நீர் இறங்கும் | √ | | | | | | | | √ |
| 4 | சலத்தின் சுவை - இனிப்பு | √ | | | | | | | | |
| 5 | ஈ எறும்பு மொய்க்கும் | √ | | | √ | √ | √ | √ | √ | √ |
| 6 | நீர் முத்து போலிருக்கும் | √ | | | | | | | | |
| 7 | நீர் தேன் போலிருக்கும் | | | | √ | √ | √ | √ | √ | |
| 8 | நீர் அடிக்கரும்பின் சாறு, மாவைகரைத்த கலவை, பால் தண்ணீர், தயிர், பன்னீர் போலிருக்கும் | | | | | | | | | √ |
| 9 | நீர் நுரைத்திறங்கும் | √ | | | | | | | | |
| 10 | சலம் குளிர்ந்துவெளியேறும் | √ | | | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | சலமணம் - தாமரை மலர், சணல், எலுமிச்சம் பழும், உதிரம் போல் மணம் | | | | | | | | | √ |
| 12 | சலமணம் - ஆனைமதம், கற்றாளை மணம் | √ | | | | | | | | |
| 13 | சலமணம் - மாம்பூ காடி குங்குமப்பூ | | | | | | | | | √ |
| 14 | சலமணம் - சுண்ணாம்பு மணம் | | | | √ | √ | √ | √ | √ | √ |
| 15 | சலம் - துர்நாற்றம் | | | | √ | √ | √ | √ | √ | |
| 16 | சலமணம் - காய்ச்சின் வெல்லப்பாகின் மணம் | | | | √ | √ | √ | √ | | √ |
| 17 | சலமணம் - பானகம், உப்பு, மல்லிகைப்பூ | | | | | | | | | √ |
| 18 | சலத்தின் சுவை - கைப்பு புளிப்பு | | | | | | | | | √ |
| 19 | சலநிறம் - பொன் மஞ்சள் இரத்தம் | √ | | | | | | | | |
| 20 | சல நிறம் - பசுப்பு மஞ்சள் | | | | √ | √ | √ | √ | √ | |
| 21 | சல நிறம் - வெளுப்பு | | | | √ | √ | √ | √ | √ | |
| 22 | சலத்தின் சுவை – கைப்பு வப்புதரித்தும் | | | | | | | | | √ |
| 23 | சலத்தின் சுவை - இனிப்பு, புளிப்பு | | | | | | | | | √ |
| 24 | சலம் பட்ட இடம் எரியும் | √ | | | | | | | | |
| 25 | வயிறு உளையும், குத்தும் | √ | √ | | | | | | | |
| 26 | உணவில் விருப்பமின்மை | √ | | | | | | | | |
| 27 | நா வரளும் | √ | √ | | | | | | | |
| 28 | தாகம் | √ | √ | | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | வெப்பு | √ | | | | | | | | |
| 30 | வெள்ளை | √ | | | | | | | | |
| 31 | களைப்பு | √ | √ | | | | | | | |
| 32 | வேர்வை | √ | | | | | | | | |
| 33 | எழுந்து நடக்க இயலாமை | √ | √ | | | | | | | |
| 34 | கண் பார்வை குறைதல் | √ | | | | | | | | |
| 35 | சீத உணவில் விருப்பம் | √ | | | | | | | | |
| 36 | காதடைக்கும் | √ | | | | | | | | |
| 37 | உறக்கம் வராது | √ | | | | | | | | |
| 38 | உடல் பலம் குன்றல் | √ | | | | | | | | |
| 39 | உடல் வெளுக்கும் | | √ | | √ | √ | √ | √ | √ | |
| 40 | கண் வெளுக்கும் | | | | √ | √ | √ | √ | √ | |
| 41 | மறதி | | √ | | | | | | | |
| 42 | வெயில் மழை பனிக்கு கடினம் | | √ | | | | | | | |
| 43 | பீசம் கோசம் கடுக்கும் | | | | √ | √ | √ | √ | √ | |
| 44 | பீசம் கோசம் வீக்கம் | | | | √ | √ | √ | √ | √ | |
| 45 | உளைவு | √ | | | | | | | | |
| 46 | சோர்வு | √ | | | | | | | | |

**பதினென்சித்தர் அருளிச்செய்த ஆத்மரட்சாமிருத மென்னும் வைத்திய சாரசங்கிரதம்** என்னும் நூலில் நீரிழிவின் வகையில் தொந்தத்தால் ஏற்படக்கூடியது வகைகள்சில கூறப்பட்டுள்ளது.

### வாதபித்த நீரிழிவு நாலின் குணம்

நீர் மஞ்சள் நறமாயும், நாற்றமாயும், ருசி புளிப்பும் கசப்புமாய், அலரிப்பூ வாசமாயும், ஐந்துவித ருசியாயும், பால் மணமாயும், ருசி வெண்ணெய் போலும், மூளை நாற்றமாயும், ருசி கைப்பயும் வசம்பு போலிருக்கும்.

### வாத பித்தநீரிழிவு இரண்டின் குணம்

நீர் கோமூத்திரம் வாசமாயும், ருசி துவர்ப்பாயும், சந்தன வாசமாயும், ருசி மிளகு போலுமிருக்கும்.

### சிலேத்துமவாத நீரிழிவு ஐந்தின் குணம்

நீர் மிகுந்த நாற்றமாயும் ருசி புளிப்பாயிருக்கும்

**பரராஜசேகரத்தில்** பிரமேகம் 20 என குறிப்பிட்டு அதில் சலப்பிரமேகத்தில் நீரிழிவின் தன்மையை கூறிப்பிடப்பட்டுள்ளது

"அதுவே சலத்திற் பிரமேக மறியிற் சுண்ணற் தனாறும்

கதுமே தாக மிகவுண்டாங் கமழ்நீ ரதனை யெறும்பருந்தும்

பொதுவாம் போகம் விரும்பாது பொருந்துந்தமுதிர்ந்து விடும்

துதிசேர் மயிலே விடாயுண்டாந் தோற்றஞ் சலமேயழல் நாறும்"

## சலத்தை பரீட்சிக்கும் முறை

| | வாதம் சலம் | பித்தம் சலம் | கபம் சலம் |
|---|---|---|---|
| குணம் | உடம்பு நடுங்கும் | சோகம் | உண்ட உணவு செமிக்காது |
| | நாவுலரும் | மூர்ச்சை | அருசி |
| | நெஞ்சுலரும் | மலபந்தம் | வாந்தி |
| | வயிறு வலிக்கும் | | மிகு நித்திரை |
| | நித்திரை வராது | | |
| நிறம் | வெண்மை | பொன்னிறம் | வெளுப்பு |
| | கருமை | மஞ்சள் | |
| | பலவர்ணம் | இரத்த நிறம் | |
| மணம் (4 வகை) | கோமயம் நாறும் | ஆனைமதம் போல் | கருபஞ்சாறு போல் |
| | பால் போல் நாறும் | கற்றாளை மணம் | |
| | இறைச்சி கழுவிய நீர் போல் நாறும் | அழல் நாறும் | |
| | தேங்காய் பால் போல் நாறும் | | |
| காய்ச்சிய பின் சுவை | புளிப்பு | இனிப்பு | துவர்ப்பு |

இன் நோயின் சாத்திய அசாத்தியத்தை சலத்தின் மேல் எண்ணெய் விடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் என பரராஜசேகரம் 5ம் பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சலத்தின் மேல் எண்ணெய் விட்டால் தாழ்ந்து மின்னி பச்சிலை போல் தழும்புமாயின் அது தீராது எனவும், எண்ணெய் போதமின்றி மிதந்திருந்தால் பிழைப்பு உண்டாகும் என்றும், எண்ணெய் வட்டம் போல் இருந்தால் நாட்சென்று தீரும் என்றும், எண்ணெய் நீரில் சிதறி சேர்ந்து போனால்உயிரைக் கொல்லும் என கூறப்பட்டுள்ளது இதனை பின்வரும் பாடலின் மூலம் தெளிவாக குறிப்பட்டுள்ளது.

''சலத்தின்மேற் றிலத்திலெண்ணெய் தனித்து விட்டாற்
றாழ்ந்துமின்னிப் பச்சிலை போற் றழம்பு மாகில்
பெலத்தசலக் கழிச்சலது தீரா தாகும்
போமின்றி மிதந்திருக்கிற் பிழைப்புண்டாகும்
நலத்தசேற் பனவாதக் கழிச்ச லாகில்
நாண்மூன்றி லேழிலெட்டி னாச மாக்கும்
சொலத்தகுநீ ரழிவுபித்த சேற்ப மாகிற்
சொல்லினா ரறுமதிமுகம் மதியாண் டொன்றே''

''ஒன்றா நீரை கலத்திதேந்த யரைக்கு மெண்ணே யொருதுளியை
நன்றாய் விட்டுப் பார்த்திடு கினலிலும்வட்டம் போனிலைத்தால்
சென்றே தீருந் சிதறிடினுஞ் சேர்ந்தே நீரிற் கலந்திடினும்
அன்றே தாழ்ந்து கீழ்ப்புகினு மைய மின்றிக் கொன்றிடுமே''

# தொகுப்பு

தற்காலத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. சித்த மருத்துவமானது இறைவனால் அருளப்பட்ட மருத்துவமாகும். இதில் 4448 நோய்கள் இருப்பதாக அகத்தியர் 2000 என்னும் மூலநூலிலும் பரராசசேகரம் என்னும் நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் கூறப்படும் நீரிழிவு நோயானது சித்தமருத்துவ ஆதி நூல்களில் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் ஆய்வின் மூலம் நீரிழிவு, சலக்கழிச்சல், சலரோகம், மதுமேகம், இனிப்பு நீர், மிகுநீர், வெகுமூத்திரம், மேகநீர், தித்திப்பு நீர், பிரமேகம், நீர்ப்பாடு என வெவ்வேறு நூல்களின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. சலம் அதிக அளவில் கழிவதை சலக்கழிச்சல் என்னும் பதம் மூலம் கூறியுள்ளனர்.

நீரிழிவின் பொதுக்குணத்தை பார்க்கும் போது அதிக சலம் போதல், களைப்பு, உடல் சோர்வு,சலத்தில் ஈ, எறும்பு மெய்த்தல், உடல் வன்மை குறைதல், மெலிதல், நாக்கு வரளுதல், தாகம், உடல் வெளுப்பு, அதிக தூக்கம், உடல் எரிவு, என்பன கூறப்பட்டுள்ளன.

நீரிழிவு நோயின் வகைப்பாட்டினைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்து சித்த மருத்துவ நூல்களின் அடிப்படையில் நீரிழிவினை சலக்கழிச்சல் எனக் குறிப்பிட்டு அதனை தோசத்தின் அடிப்படையில் வாத, பித்த, சிலேற்பன, வாத சேற்பன சலக்கழிச்சல் எனவும், குறிகுணங்களின் அடிப்படையில் இரத்த சலக்ழிச்சல், வெப்பு சலக்கழிச்சல், வெட்டை சலக்கழிச்சல், வாத வெட்டை, பிரமேக வெட்டை சலக்கழிச்சல் எனவும், நீரிழிவால் வரும் உபத்திரவத்தை அடிப்படையாக

வைத்து பிளவை சலக்கழிச்சல் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஆய்வுக்கு எடுக்கப்பட்ட நூல்களில் பொதுவான வகைப்பாடாக வாதத்தால் 04 இவை தீராது என்றும், பித்தத்தால் 06, கபத்தால் 10 என 20 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இது தோசத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது.

வகைகள் பலவாக மேற்குறிப்பிட்ட அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட போதும் இவ்வகைக்குரிய காரணங்கள் எந்த நூல்களிலும் குறிப்பிடப்படவில்லை.

நீரிழிவின் வகைகளின் குறிகுணங்களை பார்க்கும் போது எல்லா நூல்களிலும் சலம் அடிக்கடி கழிதல் கூறப்பட்டுள்ளது. மற்றும் தோசங்களின் பிரகோபத்திற்கு தக்க படி அவற்றின் குறிகுணங்கள் கூறப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ கோட்பாட்டின் படி நீரழிவுக்குரிய பொதுக்காரணங்களை நோக்குகையில் நூல்களில் கூறப்பட்ட காரணங்களின் படி கபத்தை பெருக்கக்கூடிய உணவுகளானகொழுப்பு கூடிய உணவு, இனிப்பு உணவு பிருதுவியைக்கூட்டக்கூடிய உணவுகளால் ஏற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் சோம்பல், உடற்பருமன் ஆகிய காரணங்களும் கூறப்பட்டுள்ளன.இவை அதிகமாக கப அல்லது கபத்துடன் தொந்தமாக உள்ள பிரக்கிருதி உள்ளவர்களிற்கும் ஏற்படுவதாக கருதலாம். இவற்றால் உண்டாகும் நீரிழிவை கபத்தால் உண்டாகும் நீரிழிவில் 10 வகைக்குள் அடக்கக் கூடியதாக உள்ளது.

வெயிலில் நடப்பவர், மெய்யில் எண்ணெய் பூசாதவர்,கள் உண்ணுதல், வெப்பு உணவு, புளிப்புள்ள உணவுகளை உண்பவர்களுக்கு நீரிழிவு உண்டாவதாக

கூறப்பட்டுள்ளன. இது பித்தத்தால் உண்டாகும் 06 வகைக்குள் அடக்கமுடியும்.

அதிக கலவி, நித்திரையின்மை, விந்து சலம் மிகுதி இக்காரணங்களை நோக்கும் போது வாதத்தால் உண்டாகும் நான்கு வகைக்குள் அடக்கமுடியும்.

தாய் தந்தை வழியால் உண்டாவதாக **"சித்த மருத்துவம் பொது","நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம் இரண்டு"** நூல்களில் கூறப்பட்டுள்ளது. பரராஜசேகரம் உட்பட மூலநூல்கள் எதிலும் இக்காரணம் குறிப்பிடப்படவில்லை.

பயம், சூரியனை வணங்காதவர்கள், வேதத்தை பழித்தல் போன்ற காரணங்களாலும் இந்நோய் ஏற்படலாம் என நூல்களில் கூறப்பட்டுள்ளது.


## ஒன்பது நூல்களின் ஆய்வின் முடிவில்


- நீரிழிவு நோயானது சித்த மருததுவத்தின் படி தனி ஒரு நோயாக கருதமுடியாது. இது 20 வகையாக தோசத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. (அட்டவணை 05)

- நீரிழிவு நோயின் காரணங்கள் 50% ற்கு மேற்பட்ட நூல்கள் கபதோஷத்தை உண்டாக்ககூடிய உணவுகளை உள்ளெடுப்பதால் நீரிழிவு வருவதாக கூறப்படுகின்றது. (அதிக அளவு பிருதுவி தன்மையுள்ள உணவுகளை உள்ளெடுக்கும் போது அவற்றை சமிபாடடையச் செய்வதற்கு அதிக அளவு தேயு தன்மையுள்ள பித்தம் அதாவது சதையியிலிருந்து சுரப்பு அதிகம் சுரக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் சதையி காலப்போக்கில் தனது தொழிலை சரிவரச் செய்ய முடியாத நிலையை அடைகின்றது).

- வகைகளின் குறிகுணங்கள் எல்லாவற்றிலும் சலம் அடிக்கடி அதிக அளவில் வெளியேறுகின்றது என்ற குறிகுணம் கூறப்பட்டுள்ளது. இது கீழ்நோக்குகாலை (அபானவாயு) துண்டுவதால் உருவாவது ஆகும்
- பாதிக்கப்பட்ட முத்தாதுக்களில் முதலில் கப தோஷத்தையும் பின் பித்தத்தையும் வாதத்தையும் பாதிப்படைய செய்து உடற்தாதுக்களான சாரம், செந்நீர், ஊண், கொழுப்பு என்பவற்றை தாக்கி குறிகுணங்களை உண்டாக்கின்றது.




சுரோதஸ் ஊடாக உடற்தாதுக்கு கொண்டுவரப்பட்ட ஆமமானது
உடற்தாதுக்களில் மாற்றம் செய்கின்றது
சாரம்
செந்நீர்
ஊண்
கொழுப்பு
அதிகரிப்பால்
தாதுவாக்கினி பாதிப்பு
அதிக நீரிறக்கம்
அடிக்கடி நீரிறக்கம்
கலங்களின் அனுசேபம் பாதிப்பு
சலக்கழிச்சல்
களைப்பு
உடற்பலவீனம்
எழுந்து நடக்க இயலாமை
உடல் மெலிதல்

## நீரிழிவு (சலக்கழிச்சல்) நோயுக்கும் Diabetes mellitus ற்கும் இடையான தொடர்பு

| | **சலக்கழிச்சல்** | **Diabetes mellitus** |
|---|---|---|
| **வரைவிலக்கணம்** | சலம் அடிக்கடி அதிகளவில் கழிதல் | Any group of disease characterized by high blood sugar levels caused by insufficient production of insulin impaired response to insulin |
| **காரணங்கள்** | அதிக இனிப்பு உணவு | Intake of toomuch of sugar |
| | உடற்பருமன் | Obesity |
| | கள் | Alcoholism |
| | பயம் | Stress |
| | தாய் தந்தை வழியால் | Heriditory |
| | சோம்பரித்திரிதல் | Sedentary life |
| | செறிந்த தூக்கம் | Over sleeping |
| **முற்குறிகுணங்கள் (Prediabetic stage)** | உடம்பில் சோர்வு | Fatique |
| | கனப்புக் கொள்ளுதல் | |
| | வேர்வை அதிகரித்தல் | Increase sweating |

| | | |
|---|---|---|
| | நாற்றமுண்டாதல் | |
| | எந்நேரமும் படுத்து தூங்குவதில் இச்சை உண்டாதல் | Drowsiness |
| | தாகமதிகரித்தல | Increased thirst |
| | நாக்கு வரளுதல் | Driness of tongue |
| | வாய் இனித்தல் | |
| | தொண்டையும் நெஞ்சும் காய்ந்து போதல் | Driness of throat |
| | மயிரும் நகமும் அதிகமாக வளருதல் | |
| | மூத்திரத்தில் ஈ எறும்பு விழுதல் | Glucose in the urine |
| **குறிகுணங்கள்** | அதிக சலம் வெளியேறுதல், அடிக்கடி சலம் போதல் | Poly uria |
| | தாகம் | Thirst (Polydipsia) |
| | அதிக பசி | Excessively hunger (Polyphagia) |
| | உடல் மெலிவு | Weight loss |
| | சோர்வு | Fatique |
| | மேனியில் தடிப்பு | Skin problems (skincomplication) |

| | | |
|---|---|---|
| | கண் மின்னி சோரும் | Blurred vision (eye complication) |
| | உடல் எரிவு | Neuritis |
| | மேனி நாற்றம் | Ketoacidosis |

## உசாதுணை நூல்கள்

நீரிழிவு பற்றிய நூல் ஆய்வுக்காக கீழே உள்ள நுஸல்கள் எடுக்கப்பட்டன.


1. ஏழலை ஐ.பொன்னையாப்பிள்ளை, 2016,“பரராஜசேகரம் ஐந்தாம் பாகம்”, மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் வடமாகாணசபை.
2. ஐ. பொன்னையாப்பிள்ளை, 2000,“செகராஜசேகர வைத்தியம்”, மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு வடக்கு, கிழக்கு மாகாணம்.
3. ஐ. பொன்னையாப்பிள்ளை, 2000,“வைத்திய விளக்கம் என்னும் அமிர்த சாகர பதார்த்த சூடாமணியும் வைத்திய தெளிவும் அனுபந்தத்துடன்”, மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் சுகாதார அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணம்.
4. யூகி மாமுனிவர், 2005,“யூகி வைத்திய சிந்தாமணி”, இந்திய மருத்துவம் ஒமியோத்துறை சென்னை 600106.
5. கே. வாஸுதேவ சாஸ்திரி, எஸ். வெங்கடராஜன், 1994,“சரபேந்திர வைத்திய முறைகள் நீரிழிவு சிகிச்சை”, சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சாவூர்.
6. டாக்டர்.ம. சண்முகவேலு, 2003,“சித்த மருத்துவ நோய்நாடல் நோய் முதல் நாடல் திரட்டு இரண்டாம் பாகம்”, இந்திய மருத்துவம் ஒமியொத்துறை சென்னை 600106.

7. க.ந.குப்புசாமிப்பிள்ளை, 2004,“சித்த மருத்தும் பொது”, இந்திய மருத்துவம் ஒமியொத்துறை சென்னை 600106.
8. சி.கண்ணுச்சாமிப்பிள்ளை, 1993,“சிகிச்சாரத்நதீபம் இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி”,பி.இரத்தினநாயகர் அண்ட் சன்ஸ் வெங்கட்ராமய்யர் தெரு கெண்டித்தோப்பு சென்னை 79.
9. கந்தசாமி முதலியாரவர்கள்,“பதினெண்சித்தர் அருளிச்செய்த ஆத்மரட்சாமிருத மென்னும் வைத்திய சாரசங்கிருதம்”, பி.இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், திருமகள் விலாச அச்சகம் சென்னை 79